₹10
fmpb

# அறைகூவல்

Volume 52 Issue 11 November 2022

## இயேசுவுக்காக பற்றி எரிந்திட அழைப்பு



“நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன்...”
– அப்போஸ்தலர் 13:47

உற்சாகத்துடன் தேவனுக்காய் பற்றி எரிந்திடு
நீ பற்றி எரிவதைப் பார்க்க மக்கள் பல மைல்களிருந்து வருவார்கள்!!




# ஆரம்ப வரிகள்...

ஒருமுறை ஜான் வெஸ்லியின் உடன் ஊழியர் தனது ஊழிய பாரத்தைச் சோர்வுடன் அவரிடம் பகிர்ந்து கொள்ளும்போது, அவர் அவ்வூழியரை உற்சாகப்படுத்த பயன்படுத்திய வாசகம் இன்றும் அநேக ஊழியர்களை உற்சாகப்படுத்தி வருகிறது. அது "நீ தேவனுக்காய் எரிந்து பிரகாசித்திடு, நீ எரிந்து பிரகாசிப்பதைப் பார்க்க மக்கள் பல மைல்களிலிருந்து வருவார்கள்" என்பதாகும். ஆம்! நாம் தேவனுக்காய் சுடர் விட்டெரியும் ஆவிக்குரிய அனல்மிகு மக்களாய் வாழ்ந்திட அழைக்கப்பட்டவர்கள்.

சிறுவர்கள் தினத்தைக் கொண்டாட காத்திருக்கும் நாமனைவரும் சுடர்விட்டெரிந்து நமது கரங்களில் கொடுக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு மாதிரியாக வாழ்ந்திட வேண்டும். இன்றைய சிறுவர்களை கிறிஸ்துவுக்காக பற்றியெரியும் எதிர்கால தலைவர்களாக உருவாக்குவதும் நமது கடமையாகும். நாம் தனி மனிதர்களாக நம்மை அர்ப்பணிக்கும்போது நமது பிள்ளைகள், குடும்பம், திருச்சபை, நம் தேசம் என நாம் யாவரும் கிறிஸ்துவுக்காய் எழும்பிப் பிரகாசிக்க முடியும்.

ஆத்தும பாரம் நிறைந்தவர்களாய் வாழ்ந்திட நாம் ஆவிக்குரிய அனல்மிகு மக்களாய் வாழ்வது மிக அவசியம். பலிபீடத்தின் அக்கினி அது அவிந்து போகக்கூடாது; அது எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கவேண்டும் (லேவி.6:9). பலிபீடத்தின் அக்கினி நமக்குள் அவியாமலிருந்தால், இரண்டு காரியங்கள் நமது வாழ்வில் நடக்கும். 1. அது அனுதினமும் நம்மிலுள்ள பாவத்தைச் சுட்டெரித்து பரிசுத்தமாய் வாழ்ந்திட வழிவகுக்கும். 2. அது நமது வாழ்வில் நம்மோடு தொடர்பில் இருப்போரையும் அனல்மூட்டி பிரகாசிக்கச் செய்யும். பரிசுத்தத்தைப் பிரசங்கித்தும் பரிசுத்தமாக வாழாததும், அன்பைப் பிரசங்கித்தும் அன்புடன் வாழாததும், உண்மையைப் பிரசங்கித்தும் உண்மையாய் இல்லாததும், மன்னிப்பைப் பிரசங்கித்தும் எவரையும் மன்னிக்காமல் இருப்பதுமே இன்றைய நாட்களில் நாம் எரிந்து பிரகாசிக்காமல் இருப்பதற்குக் காரணம். 'பரிசுத்தமான ஊழியன் பரிசுத்தரின் கரங்களில் பயங்கரமான ஓர் ஆயுதம்!' என்று ராபர்ட் முர்ரே மச்செயின் என்ற தேவ மனிதன் கூறுகிறார். கிறிஸ்துவின் அடியவர்களான நாமனைவரும் தேவன் பயன்படுத்தும் பரிசுத்தமான பாத்திரமாக வாழவேண்டும். இஸ்ரவேல் மக்கள் போரில் வென்ற பொன், வெள்ளி போன்ற அனைத்து ஆபரணங்களையும் பயன்படுத்தும்முன், அதை அக்கினியால் சுட்டெரித்து புடமிட்டு, ஜலத்தினால் சுத்திகரித்தப்பின்பே பயன்படுத்துவார்கள். அதுபோலவே சர்வ வல்ல தேவன் நம்மை பயனுள்ள பாத்திரமாகப் பயன்படுத்தவும், நம்மூலம் பிறரை சுடர்விட்டெரியச் செய்யவும் நாம் அக்கினியால் புடமிடப்படவேண்டியது மிக அவசியம். அப்படிப்பட்ட அர்ப்பணிப்புக்கு நேராக நம்மை இன்று ஆண்டவரிடம் சமர்ப்பிப்போம்.

கடந்த மாநில முகாமில் நவநீதர் அண்ணனின் வாசகமொன்று பார்த்தோர் அனைவரையும் மிகவும் கவர்ந்தது. அது யாதெனில், "பற்றி எரியவேண்டிய நீ பெட்டிக்குள் பதுங்கி கிடப்பது ஏன்?" பெட்டிக்குள் அனலுமின்றி குளிருமின்றி நமத்துப்போன தீக்குச்சிகளாக அல்ல, நாம் கிறிஸ்துவுக்காக பற்றியெரியும் தீக்குச்சிகளாய் வாழ்ந்திடவே தேவன் விரும்புகிறார். வெளி.3:15,16-ம் வசனங்களில் தேவன் லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு எழுதும்போது, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" என்று அனல்மிக்க வாழ்வு வாழ ஆண்டவர் நம்மையும் எச்சரிக்கிறார். நாம் அனல்மிகு மக்களாய் வாழ்ந்து ஜொலிக்கும்போது, அநேகரை நம் வார்த்தையாலும் நடக்கையாலும், இருளில் தத்தளிக்கும் மக்களையும், வாழ்வில் அனலற்று வாழும் நம் தேவ பிள்ளைகளையும் ஜொலிக்கச் செய்யும் தீப்பொறிகளாய் மாறுவோம். அதற்கு தேவன் நமக்குக் கிருபை புரிவாராக!

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். - 2 கொரிந்தியர் 4:6**

**“நீங்கள் பிறரிடத்தில் எதை கொழுந்துவிட்டெரியச் செய்ய விரும்புகிறீர்களோ, அது முதலில் உங்களுக்குள் கொழுந்துவிட்டெரிய வேண்டும்.” - புனித அகஸ்டின்**

**குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன். - ஏசாயா 42:16**

**“நான் ஜுவாலிக்கக்கூடியவனா? தேவனே, நான் ஜுவாலிக்க தடையாய் இருக்கும் அனைத்து காரியங்களிலிருந்தும் என்னை விடுவியும். நான் ஜுவாலிக்கும்படி உமதாவியின் அபிஷேக எண்ணெயினால் என்னை நிறையும். ... தேவ அக்கினியே, நான் தொடர்ந்து ஜுவாலிக்க என்னையே உமது எரிபொருளாக மாற்றும்.” - ஜிம் எலியெட்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


FRIENDS MISSIONARY PRAYER BAND

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியர்களுக்கு அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு,

சர்வ வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களனைவருக்கும் எனது அன்பின் நல்வாழ்த்துகள்!

மத்தேயு 9:18-26-ம் வசனங்களில், நாம் இயேசு செய்த இரண்டு அற்புதங்களைக் காண்கிறோம். ஒன்று, மரித்த சிறுபெண்ணை உயிரோடு எழும்பச்செய்தல்; மற்றொன்று, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயை குணமடையச் செய்தல். இதில் முதலாவது அந்த ஜெப ஆலயத்தலைவன் இயேசுவிடம் வந்து, சற்றுமுன் மரித்துப்போன தன் மகளின்மீது இயேசு தமது கையை வைக்கும்படி கெஞ்சுகிறான். உடனே இயேசுவும் அவரது சீஷர்களும் அச்சிறுபெண்ணின் தந்தையுடன் செல்கின்றனர். செல்லும்வழியில் இந்த பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவுடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இவ்வேதப்பகுதியின் மூலம் இயேசு நமக்கு இரண்டு முக்கியமான பாடங்களைத் தெரிவிக்கிறார். முதலாவதாக, இயேசுவானவர் தமது உதவியை நாடும் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய பிரச்சனையின் அளவைப் பொருட்படுத்தாமல் உதவி செய்கிறவர். இரண்டாவதாக, இயேசுவைப் பொறுத்தவரை ஜெப ஆலயத்தலைவனாக இருந்தாலும் சரி, எளிய பெண்ணாக இருந்தாலும் சரி, அனைவரும் சமமானவர்களே. கலாத்தியர் 3:28-ல் கூறப்பட்டுள்ளபடி, "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்பதே.

## செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்கள்:

தேவனுடைய அளவில்லாத கிருபையினாலும், தங்கள் யாவரின் ஜெபங்களினாலும் செப்.24-ம் தேதி செயற்குழுவும், 25-ம் தேதி பொதுக்குழுவும் தேவ ஆசீர்வாதத்துடன் சிறப்பாக நடந்து முடிந்தன.

## பஸ்தி நிலம்:

உத்தரப்பிரதேசத்திலுள்ள நமது வட இந்திய முதல் மிஷனெரிப்பணித்தளமான பஸ்தியில் நமக்கு ஒரு கட்டிடமும், நிலமும் நீண்டக்கால குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தன. அதன் குத்தகை காலம் 2015-ம் வருடத்தில் முடிவடைந்திருக்கும் நிலையில், அந்த நிலத்திற்கு உரிமையான நிறுவனம் அதை நமக்கு விற்பனை செய்ய முன்வந்துள்ளது. அந்த நிலத்தை நியாயமான விலைக்கு அவர்கள் நமக்குக் கொடுக்க தயைகூர்ந்து ஜெபியுங்கள்.

## வேலூர் CMC-யில் சிகிச்சை பெற்றுவரும் நமது மிஷனெரிகள் மற்றும் ஓர் குழந்தையுடன் சந்திப்பு:

நான் அக். 12-ம் தேதி CMC-க்குச் சென்று புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திரு. டென்சிங் & திருமதி. கவிதா டென்சிங்கின் மகள் லைசாவைப் பார்த்தேன். நான் சென்ற அந்த நாள், அவள் 6-வது கீமோவின் 2-வது டோஸ் எடுத்திருந்த நாள். அதுமட்டுமல்ல, அவளுடைய தங்கையின் பிறந்த நாளும்கூட. அவளும் அவளது பெற்றோரும் இத்தனை பெரும் வேதனையை அனுபவிக்கும் நிலையிலும் லைசா மகிழ்ச்சியாக இருந்தாள். அவளது பெற்றோரும் இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தில் உறுதியாக இருக்கின்றனர். மேலும் நான் அங்கே மூட்டு வலிக்காக சிகிச்சை பெற வந்திருந்த நமது உத்தராகண்ட் மிஷனெரியான சகோ. கிறிஸ்டியன் பிரகாஷையும் பார்த்தேன்.

## குழந்தைகள் தினம்:

இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவின் மறைவுக்குப்பின், பிரதமரின் பிறந்தநாளை குழந்தைகள் தினமாகக் கொண்டாடுவதற்கு இந்திய பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நமது குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் நல் ஆவிக்குரிய சூழலை உருவாக்குவதற்கான நமது

பொறுப்பை நாமனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.

### விரிவுப்பணி செயலர்களுக்கான ஊழிய அறிமுகப்பயிற்சி:

தமிழ்நாடு-பாண்டி விரிவுப்பணி சார்பாக பெத்தேலில் வைத்து புதிதாகப் பொறுப்பேற்றுள்ள விரிவுப்பணி செயலர்களுக்கு அக்.14 முதல் 16 வரை ஊழியத்திற்கான அறிமுகப்பயிற்சி நடத்தப்பட்டது. அதில் நான் 2 நாட்கள் கலந்து கொண்டேன். இது நல்ஐக்கியத்திற்கான வேளையாகவும், ஆவிக்குரிய மற்றும் நமது விரிவுப்பணி ஊழியத்தின் பங்கை உள்ளடக்கியதாகவும் அமைந்திருந்தது.

### நெல்லை சந்திப்பு:

நமது வசாவே வேதாகம மொழிப்பெயர்ப்பாளரும், நமது மூத்த ஓய்வுப்பெற்ற மிஷனெரிகளுள் ஒருவருமான திருமதி. லீலாபாய் ராஜேந்திரன் அவர்களின் பிரிவு, நமக்கு ஒரு பெரிய இழப்பாகும். அவர் சிலகாலம் புற்றுநோயை எதிர்கொண்டு போராடி, பின்பு அக்.14-ம் தேதி இவ்வுலக ஓட்டத்தை முடித்தார். அக்காவின் அடக்க ஆராதனை அண்ணனின் சொந்த ஊரான சிவந்திபுரத்தில் வைத்து கடந்த 17-ம் தேதி நடைபெற்றது. அதில் நானும், நமது முழுநேர மிஷனெரிகள் மற்றும் ஜெபக்குழுத்தலைவர்களும் இணைந்து மிஷனெரி சகோதரிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம்.

### மிஷனெரிகளின் ஆவிக்குரிய வாழ்வு மாநாடுகள்:

வட இந்திய விரிவுப்பணி மிஷனெரிகள் தங்களின் ஆவிக்குரிய வாழ்வு மாநாட்டை முன்னிட்டு, நவ.2-ம் தேதி முதல் 3 நாட்கள் சிலிகுரியில் சந்திக்க உள்ளனர். மத்திய மண்டலத்தைச் சார்ந்த நமது பணித்தள மிஷனெரிகள் தங்களின் ஆவிக்குரிய வாழ்வு மாநாட்டை ஆந்திரப்பிரதேசத்திலுள்ள காக்கிநாடவில் வைத்து நவ.4 முதல் 6-ம் தேதி வரை நடத்த உள்ளனர். இவ்விரண்டு கூட்டங்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

### NIM சிறப்புக்குழு:

உத்தரப்பிரதேசம், ஜான்சியிலுள்ள நமது தேசிய மிஷனெரிப்பயிற்சி மையத்திற்கான சிறப்புக்குழு அங்குள்ள பாடத்திட்டம் மற்றும் அதை மேம் படுத்துவதற்கான பயிற்சித்திட்டத்தை மதிப்பாய்வு செய்வதற்காக நவ.18-ம் தேதி கூடுகிறது. பயிற்சி பெறும் மிஷனெரிகளுக்கு நமது FMPB-ன் தரிசனம் மற்றும் நெறிமுறைகளை நன்கு பயிற்றுவிக்கும் ஓர் இடமாக நமது பயிற்சிமையத்தை உருவாக்க சரியான தீர்மானங்களை எடுக்க அச்சிறப்புக்குழு உறுப்பினர்களை தேவன் வழிநடத்த ஜெபியுங்கள்.

### பாவ்ரா விழா:

முக்கியமாக மத்தியப் பிரதேசத்திலுள்ள பாவ்ரா பழங்குடியினரிடையே பணிசெய்யும் நமது மிஷனெரிகள், இம்மக்களிடையே 25 ஆண்டு களாக செய்துவரும் ஆத்தும ஆதாய ஊழியத்தை நினைவுகூரும் வகையில் 2 நாட்கள் கூட்டத்தை (நவ.21&22) ஏற்பாடு செய்துள்ளனர். இக்கூட்டம் அந்த முழு மக்கள்கூட்டத்தையும் கிறிஸ்துவின் அன்பிற்குள் கொண்டுவர நமது பாவ்ரா விசுவாசிகளுக்கு நல் ஊக்கத்தை அளிக்க வேண்டுமென ஜெபியுங்கள்.

### வட இந்திய திருச்சபை - டெல்லி பேராயத்தின் பேராயர் அபிஷேக ஆராதனை:

நமது முன்னாள் துணைத்தலைவர் மாமறை. அருட்திரு. டாக்டர். பால் ஸ்வரூப் CNI-டெல்லி பேராயத்தின் பேராயராக தேர்ந்தெடுக்கப்பட்டு 2022, அக்.16-ம் தேதி திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் ஒரு வேத வல்லுனர், திறமையான நிர்வாகி மற்றும் தொலைநோக்கு தரிசனம் கொண்டவர். FMPB இவரை அன்புடன் வரவேற்பதோடு, தேவன் இவருக்கு அளித்திருக்கும் இப்புதிய பொறுப்பில், இவர் தேவ ஊழியத்தை ஆசீர்வாதமாய் செய்து நிறைவேற்ற ஜெபிப்போம்.

### கிறிஸ்துமஸ் வெகுமதி:

FMPB - நமது மிஷனெரிகள், ஓய்வுப்பெற்ற மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், தன்னார்வ ஊழியர்கள் ஆகியோருக்கு பரிசுத்தொகை மற்றும் சிறுவர், சிறுமியர் விடுதிகளிலுள்ள 13410 பிள்ளைகளுக்கு பரிசுப்பொருட்களையும் வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக அனைத்து மிஷனெரி ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஜெபத்துடன் தங்களது உதாரத்துவமான காணிக்கைகளை நன்கொடையாக ஈந்தளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்களது நன்கொடைகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு, மேலே குறிப்பிடப்பட்ட தேவ ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# பிரகாசிக்கப்பட்டு, பிரகாசிப்பிக்க அழைப்பு!

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தேவனுக்காக எரிந்து பிரகாசிக்கும் மனிதர்களை தேவன் எழுப்பிக்கொண்டேதான் இருக்கிறார். சரித்திரத்தில் மொரேவிய ஊழியர்கள் உலகிலுள்ள மக்களுக்கு ஜுவாலிக்கும் ஒளியாகப் பிரகாசித்தார்கள். அதன் தலைவர் சின்செண்டார்ப் குழுவாக தேவனுக்காக எரிந்து பிரகாசிக்க தங்களின் சரீரம் சிதைக்கப்படவும், கிழிக்கப்படவும் தங்களையே அர்ப்பணித்தார். சீன தேசத்தில் ஹட்சன் டெய்லர், அமெரிக்காவில் டாக்டர். பில்லி கிரகாம், டி.எல்.மூடி, இந்தியாவிற்கு வந்த வில்லியம் கேரி, பற்தொலொமேயு சீகன்பால்க், ரிங்கல் தௌபே, ராகலாந்து ஐயர், ரேனியஸ் ஐயர், இவான் ராபர்ட்ஸ், இங்கிலாந்தில் ஜான் பனியன், ஜோனத்தான் எட்வர்ட், ஸ்காட்லாந்தில் ஜான் நாக்ஸ், தென் ஆப்பிரிக்காவில் சகரியா டோனி ஃபோம், இந்தியாவில் ஜெப தந்தையாகிய நமது பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன், மால்தோ மண்ணில் மடிந்த அவரது மகன் திரு. ஜிம் எலியெட், சகோ. ஜெயராஜ், அவரது மகன் மற்றும் சகோ. தேவதாஸ் என்று திரளான கூட்டத்தார் தேவனுக்குச் சாட்சிகளாய், படிக்கற்களாய் வாழ்ந்து எரிந்து பிரகாசித்து மக்களைப் பிரகாசிப்பித்தார்கள்.

## இயேசுவே எரிந்து பிரகாசிக்கும் மாதிரி:

நாமும் அவ்வாறே எரிந்து பிரகாசிக்க நமக்கொரு சிறந்த முன்மாதிரி இயேசுகிறிஸ்துவே. அதற்கு நாம் இயேசுவைப் போல மாற வேண்டும்; அவருடைய நற்குணாதிசயங்கள் நம்மில் காணப்பட வேண்டும். இவ்வுலகத்தில் வாழும் மக்கள் யாவரும் தங்களுக்காகவே வாழ்கின்றனர். ஆனால், கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிப்பவர்கள் தங்களுக்காக அல்ல பிறருக்காகவே மெழுகுவர்த்தியைப் போல் கரைந்து வாழ்ந்து ஜொலிப்பார்கள். இயேசுவிடம் காணப்பட்ட குணாதிசயங்களில் 'மை' என்ற எழுத்தை வைத்து பார்ப்போமானால், 10 விதமான குணாதிசயங்களை நாம் காணலாம். அவையாவன: மனத்தாழ்மை (மத்.11:29); தூய்மை (ரோ.13:14); பொதுவுடைமை (பிலி.2:4,5); வெறுமை, அடிமை (பிலி.2:7); எளிமை (2கொரி.8:9); பொறுமை (2தெச.3:5); உண்மை (எபி.3:1,2); ஒற்றுமை (யோ.17:21-23); வல்லமை (அப்.10:38) நன்மை (அப்.10:38). இயேசுவுக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் இயேசு நடந்தபடியே தானும் நடக்கக்கடவன். ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம் (1யோ.2:6; 1யோ.4:17).

## இயேசுவின் சந்ததி எரிந்து பிரகாசிக்கும் சந்ததி:

கிறிஸ்து இயேசுவுக்காக எரிந்து பிரகாசிப்பது என்பது நமக்கு ஒரு கட்டளையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. ''நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச்

செய்கிறோம்" என்று இயேசுவுக்காக எரிந்து பிரகாசித்த பவுலும், பர்னபாவும் சொல்வதை - அப்.13:47-ல் வாசிக்கிறோம். முதல் முறையாக இந்த வசனம் **"உம்மை ஜாதி களுக்கு ஒளியாக வைப்பேன்"** என்று ஏசாயா 49:6-ல் ஆண்டவர் இயேசுவைக் குறித்து தீர்க்கதரிசனமாகச் சொல்லப் பட்டது. இயேசு தாம் பாடுபடும்போதும், தம்மையே குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போதும், அவர் எரிந்து பிரகாசிக்கும் தமது சந்ததியைக் கண்டார்; தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டார்; நீதிபரராகிய அவர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அநேகரை அவருக்குப் பங்காகவும், கொள்ளையாகவும் பெற்றுக்கொள்வார் என ஏசாயா 53:10-12-ம் வசனங்களில் வாசிக்கிறோம். இந்த வசனங்களின்படி இயேசுவை ஏற்றுக்கொண்டு, விசுவாசித்து, உண்மை யாய் அவரைப் பின்பற்றுகிற யாவரும் எரிந்து பிரகாசிக்கும் சந்ததி. உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாக இயேசு வந்தார் என்று யோவான் 1:9-ல் வாசிக்கிறோம். ஆகவே, நாமனை வரும் இயேசுகிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிக்க அவரோடு இணைந்து அவருடைய வார்த்தையின்படி அவர் சித்தம் செய்வோராய் நாம் வாழ தேவன் நம்மை எதிர்பார்க்கிறார்.

## இயேசுவின் ஊழியக்காரர்கள் எரிந்து பிரகாசிக்கப்பட்டு, பிரகாசிப்பிக்கும் சந்ததி:

ஊழியக்காரர்கள்: (i) இயேசுவைப் போல புறஜாதிகளுக்குள் பிரகாசிக்கின்ற ஒளியாக வாழ அழைப்புப்பெற்றவர்கள் - யோவான் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் (யோவான் 5:35). (ii) இருளிலிருந்தும், சாத்தானுடைய அதிகாரத்தினின்றும் மக்களைப் பிரகாசிப்பிக்கிறவர்கள் - ''அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தா னுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத் திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" என்று அப்.26:18-ல் வாசிக்கிறோம்.

ஆம், கர்த்தராகிய தேவன் தமது ஊழியக் காரர்களை அக்கினி ஜுவாலைகளாக மாற்றுகிறார் (சங்.104:4). நமக்குள்ளாகப் பற்றியெரியும் அக்கினி ஜுவாலை ஒருவேளை நம்மூலம் பெரிய அளவில் கிரியை செய்யாவிட்டாலும், நம்மால் அனலூட்டப்பட்டிருக்கும் வேறொருவரைக் கொண்டு தேவன் பெரிய அளவில் சாதனையையும், சகாப்தத்தையும் செய்யக்கூடும். இன்றும் நம்முன்னால் ஆண்டவருக்காய் பெரிய காரியங்களைச் சாதித்த மற்றும் சாதித்துக்கொண்டிருக்கின்ற டாக்டர். சாம் கமலேசன், சகோ. எமில் ஜெபசிங், சகோ. பேட்ரிக் ஜாஷ்வா, சகோ. டி.ஜி.எஸ். தினகரன், சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ. அகஸ்டின் ஜெபக்குமார் போன்றோரை இரட்சிப்பின் ஒளிக்குள் வழிநடத்தியவர்களை நமக்கு தெரியாது. ஆனால், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அனைவரும் வெளியுலகமறிய எரிந்து பிரகாசிக்கும் நட்சத்திரங்களாய் திகழ்ந்து, தேவனுக்காய் பெரிய காரியங்களைச் செய்தவர்கள். எனவே, பரிசுத்த ஆவியான வரின் துணையோடு நம்மால் இயன்றவரை நாம் இயேசுவின் குணாதிசயங்களால் நிறையப்பட்டு, தேவனுக்காக நாமும் எரிந்து பிரகாசிப்போம்; அநேகரை நீதிக்குட்படுத்தும் மாதுூயப்பணியில் தேவனுக்காய் எழும்பிப் பிரகாசிக்க ஒரு கூட்ட மக்களையும் பிரகாசிப்பிப்போம்.

## இயேசுவின் சந்ததியாகப் பிரகாசிக்க அவசியமானவைகள்:

கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசித்திடவும், வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்திடவும் 'தரிசனமும், பொறுப்பும்' இன்றியமையாதவைகள். ஆனால், மறுமைக்கு எந்த பயனுமில்லாத அளவிற்கு நாம் இம்மையின் இவ்வுலக சிந்தையில் மூழ்கிவிட்டோமென்றால், நம்மால் எரிந்து பிரகாசிக்க முடியாது. பொறுப்பற்ற தரிசனம் வெறும் கற்பனையாளனை உருவாக்கும் பணியாகும். தரிசனமும், பொறுப்பும் இணையப்பெற்றவனே ஒரு மிஷனெரியாவான். உசியா மரணமடைந்த போதுதான், ஏசாயாவிற்கு தரிசனம் கிடைத்தது. ஒருவேளை கர்த்தருடைய முழு தரிசனத்தை நாம் காணக்கூடாதபடியும், அவருக்காக ஜுவாலிக்க முடியாதபடியும் நமக்கு தடையாக நமது வாழ்க்கையில் எவராவது அல்லது ஏதாவது இருக்கலாம். ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு நாம் அதிக விலைக்கிரயம் செலுத்தியாக வேண்டும். சில சமயங்களில் நாம் வதைக்கப்படும் அளவிற்கு துன்பத்தைச் சகிக்கவேண்டியதாய் இருக்கும். சில வேளைகளில் நம் உறவினரையும் அல்லது வேலையையும் இழக்க வேண்டியதாய் இருக்கும். எதுவாக இருந்தாலும் தேவனுடைய முழு தரிசனத்தையும் பெற்றுக்கொள்ள நாம் எதையும் தியாகம் செய்ய ஆயத்தமாய் இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிக்க ஏசாயா பெற்ற முப்பரிமாண தரிசனம் நமக்கு தேவை (ஏசா.6:1-9).

(i) கதறுதல் - ஐயோ! (வ.5);
(ii) கழுவப்படுதல் - இதோ, (வ.7);
(iii) கட்டளை பெறுதல் - போ (வ.9)

ஆம், அது மேல்நோக்கிய தரிசனம் - அவன் ஆண்டவரை உயரமும் உன்னதமுமான இடத்தில் கண்டான்; உள்நோக்கிய தரிசனம் - அவன் தன் சொந்த இருதயத்தின் பரிதாபமான நிலையைக் கண்டான்; வெளிநோக்கிய தரிசனம் - அவன் உலக மக்களின் நிலையைக் கண்டான்; பரிசுத்தத்தின் தரிசனம் - அவன் தேவனை சகல பரிசுத்தத்திலும் கண்டான்; பரித பித்தலின் தரிசனம் - அவன் 'யார் நமது காரியமாய்ப் போவான்?' என்ற தேவனின் பரிதபிக்கும் குரலையும் கேட்டான்.

ஜெபத்தைக் காட்டிலும் பதவி உயர்வையும், பரிசுத்தத்தைக் காட்டிலும் போட்டி மனப்பான்மையையும், சுவிசேஷத்தைப் பறைசாற்றுவதைக் காட்டிலும் பெருமையடித்துக்கொள்வதையும் கூடுதலாகச் செய்துவரும் இன்றைய கிறிஸ்தவ வெகுஜனங்களுக்கு இந்த முப்பரிமாண தரிசனம் மிகவும் அவசியம்.

## இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம்:

ஒவ்வொரு கிறிஸ்தவனும் எரிந்து பிரிகாசிக்க வேண்டும் என்பது இயேசுவின் கட்டளை. பவுல் நிறைவேற்றியது போல உலகிலும், இந்திய தேசத்திலும் இன்றும் இயேசுவின் சுவிசேஷ ஒளி சகல ஜாதிகளை இருளிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும், கட்டுகளிலிருந்தும், உலக மாம்ச இச்சைகளின் பாவங்களிலிருந்தும் மீட்டுப் பிரகாசிக்கச் செய்கின்றது. பிரகாசிக்கப்பட்டவர்கள் கர்த்தரின் கட்டளைப்படி அவரவர் சந்ததியை, தலைமுறையைப் பிரகாசிப்பிக்கிறார்கள். நாமும் நமது சந்ததியை, நமது தலைமுறையை இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய விந்தை ஒளிக்குள் வரவழைப்போம்; அவரையே கூறுவோம்; அவரையே காண்பிப்போம். நமது வாழ்க்கையின் நன்னெறிகள் மூலம் வெளிச்சம் வீசுவோம்; இயேசுவுக்கே அவர்களைச் சொந்தமாக்குவோம்.

**- அருட்திரு. M. ராஜ்**

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



## திருமதி. லீலாபாய் ராஜேந்திரன்
(1948 - 2022)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரி திருமதி. லீலாபாய் ராஜேந்திரன், வசாவி மொழியின் வேதாகம தொழிப்பெயர்ப்பாளர். 38 வருடங்களுக்கு மேலாக தேவனுக்காகப் பணியாற்றியவர்கள். சகோதரி. லீலாபாய் 1948-ம் ஆண்டு டிசம்பர் 29-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாக்கோடு என்ற கிராமத்தில் ஒரு கிறிஸ்தவக்குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர் திரு. ஏசையா & திருமதி. பாலம்மாள். அவர் சிறுவயதாயிருக்கும்போதே, அவருடைய பெற்றோர் தேவராஜ்யம் அடைந்தனர். தனது சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் உதவியோடு அவர் மார்த்தாண்டத்திலுள்ள பள்ளியில் தனது எஸ்.எஸ்.எல்.சி வகுப்பை முடித்து, குடும்பத்திற்கு உதவியாக வேலை செய்து வந்தார். 1970-ல் நடைபெற்ற ஒரு ஆவிக்குரிய கூடுகையில் பங்கேற்று, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

கிறிஸ்துவில் வளர்ந்துவந்த சகோதரி. லீலாபாய் தன் ஆலயத்தில் நடைபெற்ற மிஷனெரித்தரிசனக்கூடுகையில் பங்கேற்று, தன்னை முழுநேர மிஷனெரிப்பணிக்கென அர்ப்பணித்து, 1975-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக சேர்ந்தார். அலகாபாத்திலுள்ள கல்வாரி வேதாகமப்பள்ளியில் ஓராண்டு பயிற்சியை முடித்து, உத்தரப்பிரதேசத்திலுள்ள ஜான்சி மற்றும் அலிகார் போன்ற இடங்களில் மிஷனெரியாகப் பணியாற்றி வந்தார்.

1977-ம் ஆண்டு, ஜுலை 29-ம் தேதி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரியான அருட்திரு. ராஜேந்திரன் அவர்களுடன் திருமணத்தில் இணைக்கப்பட்டார். பின் குடும்பமாக ஹரியானாவிலுள்ள சிர்சா என்ற பணித்தளத்திற்கு மிஷனெரிகளாகச் சென்று திருச்சபை நாட்டும் பணியைச் செய்து வந்தனர். தேவன் இவர்களுடைய திருமண வாழ்வை ஆசீர்வதித்து 2 மகன்களைக் கொடுத்தார். முதல்மகன் பெனடிக்ட் சாமுவேல் திருமணமாகி, மருத்துவராக இருக்கிறார். 2-வது மகன் இம்மானுவேல் சுந்தர் சிங் திருமணமாகி, மெக்கானிக்கல் பொறியாளராக சென்னையில் பணியாற்றி வருகிறார்.

1982-ம் ஆண்டு முதல் வசாவி வேதாகம மொழிப் பெயர்ப்பு பணியில் ஈடுபட்ட திருமதி. லீலா மற்றும் அருட்திரு. ராஜேந்திரன், புதிய ஏற்பாட்டை வசாவி – அம்புரி & வசாவி – தேவாலி மொழிகளில் மொழியாக்கம் செய்து முடித்து, விசுவாசிகளுக்குக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். மற்றும் வசாவி ஆடியோ புதிய ஏற்பாட்டையும், இயேசுத்திரைப்படத்திற்கான வசாவி பின்னணி குரல் மொழிப்பெயர்ப்பிற்கு உதவியும் செய்துள்ளார்கள்.

2013-ம் ஆண்டு திருமதி. லீலாபாய் பணி ஓய்வு பெற்றும், பழைய ஏற்பாடு மொழிப்பெயர்ப்பிற்கு உதவி செய்து வந்தார். 2020-ம் ஆண்டு கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு, வேலூர் – சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, தங்களது இளையமகன் வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். 2022 அக்டோபர் மாதம் கோவிட் மற்றும் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு, சென்னை கல்யாணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். மருத்துவர்களின் முயற்சி பலனளிக்காமல், அக்டோபர் 14-ம் தேதி இரவு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது அடக்க ஆராதனை மேலச்சிவந்திபுரம் தென் இந்திய திருச்சபை பரி.கல்வாரி ஆலயத்தில் வைத்து 17-ம் தேதி நடைபெற்று, அங்குள்ள கல்லறை தோட்டத்தில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு திருமதி. லீலாபாய் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. தேவன் கொடுத்த ஓட்டத்தை வெற்றியாக ஓடி முடித்த அவர்களின் வாழ்விற்காக ஆண்டவருக்கு நன்றி கூறுவோம். அருட்திரு. ராஜேந்திரன் மற்றும் பிள்ளைகளுடைய குடும்பத்தை நம் ஜெபத்தில் நினைவுகூருவோம்.

**– அருள்திரு. அறிவர். E. ராஜன்**

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நாகர்கோவில்-தெற்கு பணி மாவட்டம், குருசடி என்ற இடத்தைச் சேர்ந்த திரு. தம்பி டேவிட் (வயது-61) அவர்கள், கடந்த 13.08.2022 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் நாகர்கோவில் பகுதி யில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் அநேக ஆண்டுகளாக ஸ்கேன் ஊழியத்தில் அதிகமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். இவர் ஒரு குழந்தை ஆதரவாளராகவும் மிஷனெரி ஆதரவாளராகவும் நமது ஊழியத்தைத் தாங்கியும், தனது வீட்டில் ஜெபக்கூட்டங்களை நடத்தியும் வந்தார். இவர் அடிக்கடி பணித்தள விஜயம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததால், வடஇந்தியாவில் ஆலயமும் கட்டிக்கொடுத்துள்ளார். நமது ஊழியங்களுக்காக மனமுவந்து கொடுத்தவர். இவர் தேவனுக்குப் பயந்து நேர்மையாக மற்றவர்களுக்கு உதவி செய்து முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்தவர். இவரது மனைவியும் இவரோடு இணைந்து ஊழியத்தைத் தாங்கி, ஜெபக்கூட்டங்களை நடத்தி வருகிறவர். இவருடைய பிரிவினால் வாடும் இவரது மனைவி திருமதி. ஜெஸிலா தம்பி டேவிட், மகனின் குடும்பம் மற்றும் குடும்ப உறவினர்களின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.



நெய்வேலி, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் பகுதியில் 40 வருடங்களுக்கும் மேலாக ஜெபக்குழு தலைவியாகச் செயல்பட்டு வந்த திருமதி. ஞானபிரகாசி மோசஸ் (வயது-86) அவர்கள், கடந்த 18.09.2022 அன்று தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் ஜெபக்குழு நடத்துவதிலும், ஊழியத்திற்கு தனது பிள்ளைகளை அர்ப்பணித்து வளர்ப்பதிலும் சிறந்து விளங்கினார். இவர்களது 2-வது மகன் திரு. ஜாண் ஆன்ட்ரூஸ் சுகிர்தராஜ் அவர்கள் நமது சென்னை - தலைமை செயலக நிதித்துறை பிரிவில் மிஷனெரியாகப் பணிபுரிந்து வருகிறார். இத்தாயாருடைய மரணம் நமது கடலூர் ஊழியப்பகுதிக்கு பெரும் இழப்பாகும். இவரது பிரிவால் வாடும் இவருடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவினர்கள் யாவருக்கும் தேவன் நல்ல மனஆறுதலைத் தந்து தேற்றி பெலப்படுத்த ஜெபிப்போம்.



திரு. ஜெயராஜ் சாலமோன் (வயது-75) அவர்கள், வண்ணாரப்பேட்டை பகுதியிலுள்ள நமது இயக்க ஜெபக்குழுத்தலைவராக இருந்து கடந்த 20 ஆண்டுகாலமாக நமது இயக்கத்திற்குப் புதிய நபர்களைக் கண்டுபிடித்து, அழிந்து போகிற ஆத்துமாக்களுடைய இரட்சிப்பின் உன்னதப் பணிக்கு குடும்பமாக உழைத்த நல்லதொரு ஜெபவீரர். இவர் கடந்த ஒரு சில ஆண்டுகளாகவே பெலவீனப்பட்டிருந்ததால் தொடர்ந்து இவரால் ஊழியப் பணியில் உதவ இயலவில்லை. ஆனாலும் கொடுப்பதை நிறுத்தவில்லை; ஜெபிக்கவும் மறக்க வில்லை. இவர் கடந்த 30.09.2022 அன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார். இவர் விட்டுச்சென்றுள்ள ஊழியத்தைச் செய்ய இன்னொரு நபரையும் இவ்வூழியப்பாதையில் உதவிட அறிமுகப்படுத்தியுள்ளார். இவருடைய பிரிவால் வாடும் இவரது மனைவி, மகன், மகள் குடும்பத்தினர்களை தேவன்தாமே ஆற்றித்தேற்ற ஜெபிப்போம்.

# நிதிக்காவலரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளர்களுக்கு,

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல் வாழ்த்துக்கள்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் நீங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டிற்காக ஆண்டவரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். கடந்த நிதியாண்டில் தேவன் பாராட்டிய அனைத்து நன்மையான ஈவுகளுக்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

பணித்தள திட்ட ஊழியங்கள், மருத்துவ ஊழியம் மற்றும் சிறுவர் விடுதி போன்ற பல்வேறு விதமான ஊழியங்கள் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஆண்டவரின் மாபெரும் மீட்பின் பணியை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. இதற்கென்று ஆண்டுதோறும் கணிசமான தொகை செலவிடப்பட்டு வருகிறது. அதோடுகூட கிறிஸ்துமஸ் வெகுமதி, ஊழியர்களுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் உயர்க்கல்வி செலவு, ஊழியர்களின் சேமநல நிதி என பல வகைகளில் நிதி செலவு செய்யப்பட்டு வருகிறது. இப்படி 2021 - 22-ம் நிதியாண்டில் செலவுச்செய்யப்பட்ட நிதி விபரங்களில் சிலவற்றை உங்கள் கவனத்திற்கென்று கீழே தொகுத்துள்ளேன். முழுமையான நிதி விபரங்கள் இந்த அறைகூவல் இதழில் விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் பார்த்து முழு விபரங்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஊழியர்களின் ஊதியம் மற்றும் சலுகைகள் | - | 16,12,66,675.00 |
| 2. குழந்தை பராமரிப்பு செலவுகள் | - | 9,76,54,810.00 |
| 3. சமுதாய மேம்பாட்டு முகாம் செலவுகள் | - | 6,33,12,171.00 |
| 4. ஆலயக்கட்டுமானச் செலவு | - | 6,23,92,138.00 |
| 5. குழந்தைகளின் கல்வி மற்றும் உயர்க்கல்விக்கான செலவு | - | 1,70,61,294.00 |
| 6. ஊழியர்களின் மருத்துவச் செலவு | - | 2,43,79,838.00 |
| 7. ஊழியர் சேமநல நிதி | - | 3,44,16,426.00 |
| 8. கிறிஸ்துமஸ் வெகுமதி | - | 2,92,25,909.00 |
| 9. ஊழியர்களின் ஓய்வூதியம் | - | 90,75,730.00 |

நிதித்துறையின் அனைத்துத்தர ஊழியர்களையும் தேவன் அவருடைய ஞானத்தால் நிரப்பவும், அவர்கள் யாவரும் அவருடைய பணியைத் திறம்படச் செய்யவும் உங்கள் ஜெபங்களில் நினைவுகூருங்கள்.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்,

**CA. L. நெல்சன்**
நிதிக்காவலர்

J S A S & Associates
Chartered Accountants

# INDEPENDENT AUDITOR'S REPORT ON FINANCIAL STATEMENTS

To
The Members of
**M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND**

**Report on the Financial Statements:**
We have audited the Financial Statements of M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND, 29, High School Road, Ambattur, Chennai – 600 053 ("the Society"), which comprise of Balance Sheet as at 31st March 2022, the Income & Expenditure account and the Receipts and Payments account for the year ended 31st March 2022 and the notes to the financial statements consisting of summary of significant accounting policies.

In our opinion and to the best of our information and according to the explanations given to us,

> Subject to our "Observations on Financial Systems and Statements" attached to this Report, these Financial Statements of accounts of **M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND** give a true and fair view of the financial position of the Society as at 31st March 2022 and of its financial performance for the year then ended in accordance with the Accounting Standards issued by the Institute of Chartered Accountants of India (ICAI).

**Basis for Opinion:**
We have conducted our audit in accordance with Standards on Auditing (SAs) issued by the Institute of Chartered Accountants of India. Our responsibilities under those standards are further described in the *Auditor's Responsibilities for the Audit of the Financial Statement* section of our report. We are independent of the "M/s. Friends Missionary Prayer Band, Chennai" in accordance with the Code of Ethics issued by the ICAI, and have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Responsibilities of Management and those charged with Governance for the Financial Statement:**
Management is responsible for the preparation and fair presentation of these financial statements that give a true and fair view of the state of affairs and results of operations in accordance with the accounting principles generally accepted in India. This responsibility includes the design, implementation and maintenance of internal control relevant to the preparation and presentation of these Financial Statements that give a true and fair view and are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the entity's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the entity or to cease operations, or has no realistic alternative but to do so.

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 0[illegible]5S Chennai-40

Old No.: 92/7, New No.:46/7, 3rd Floor, T-Block (T-92) 5th Main Road, Annanagar, Chennai - 600 040.
Tel.: 044-4855 1833, 044-2626 3800, E-mail : office.jsas@gmail.com

Those charged with governance are responsible for overseeing the Organization's financial reporting process.

**Auditor's Responsibilities for the Audit of the Financial Statement:**
Our objectives are to;

1. Obtain reasonable assurance about whether the financial statements as a whole is free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with Standards on Auditing (SAs) will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

   As part of an audit in accordance with SAs, we exercise professional judgment and maintain professional scepticism throughout the audit. Identify and assess the risks of material misstatement of these Financial Statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

2. Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control.

3. Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates, if any, and related disclosures made by management.,

4. Evaluate the overall presentation, structure and content of these Financial Statements, including the disclosures, and whether these Financial Statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

5. We have communicated with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that we identified during our audit.

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 01[illegible]59S Chennai-40

Our responsibility is to express an opinion on these Financial Statements based on our audit. We conducted our audit in accordance with the Standards of Auditing (SA) as prescribed by the Institute of Chartered Accountants of India (ICAI). These Standards require that we comply with ethical requirements and plan and perform the audit to obtain reasonable assurance about whether these Financial misstatements.

An audit involves performing procedures to obtain audit evidence about the amounts and disclosures in these Financial Statements. The procedures selected depend on the auditor's judgment, including the assessment of the risks of material misstatement, of these Financial Statements, whether due to fraud or error. In making those risk assessments, the auditor considers the internal control relevant to the entity's preparation and fair presentation of these Financial Statements in order to design audit procedures that are appropriate in the circumstance, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control. An audit also includes evaluating the appropriateness of the accounting policies used and the reasonableness of the accounting estimates made by the management, as well as evaluating the overall presentation of these financial statements.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our audit opinion.

**For J S A S & Associates**
**Chartered Accountants**
**(FRN. 014859S)**

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

**John Ravindran Moses**
**Partner**
**(Mem. No. 028566)**
UDIN: 22028566ATWYSL5024

Place: Chennai
Date: 05.09.2022

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**BALANCE SHEET AS AT 31 MARCH 2022**

| LIABILITIES | SCH | VALUE AS AT 31-MARCH-2021 | VALUE AS AT 31-MARCH-2022 | ASSETS | SCH | VALUE AS AT 31-MARCH-2021 | VALUE AS AT 31-MARCH-2022 |
|---|---|---|---|---|---|---|---|
| **CAPITAL FUND** | 1 | 43,75,38,195 | 45,55,04,337 | **PROPERTY, PLANT & EQUIPMENT** | 6 | 40,30,56,304 | 40,72,82,508 |
| **OPTION U/S 11(2)** | | - | 7,31,38,199 | **INVESTMENTS** | | | |
| **FUNDS** | | | | Deposits with banks | 7 | 38,97,87,771 | 40,85,00,210 |
| Endowment Funds | 2 | 1,44,81,597 | 1,62,54,017 | **CURRENT ASSETS** | | | |
| Staff Benefits Funds | 3 | 21,53,33,111 | 22,55,42,724 | Loans and Advances | 8 | 5,14,81,296 | 6,47,84,764 |
| Others Funds | 4 | 17,60,83,852 | 15,75,40,347 | TDS Receivable | | 26,53,399 | 31,99,390 |
| **CURRENT LIABILITES** | 5 | 6,27,25,607 | 3,70,71,812 | Security and Caution deposits | | 5,67,840 | 5,67,840 |
| Earnest Money Deposit | | 1,57,943 | 1,57,943 | Cash in Hand | | 4,38,040 | 9,69,368 |
| TDS Payable | | 1,615 | 7,380 | Cash at Bank | | 5,83,37,269 | 7,99,12,679 |
| **TOTAL** | | 90,63,21,920 | 96,52,16,759 | **TOTAL** | | 90,63,21,920 | 96,52,16,759 |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For J S A S & Associates**
**Chartered Accountants**
**(Firm Registration No. 014859S)**

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

**Place : Chennai**
**Date : 05.09.2022**

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

**L. NELSON**
**TREASURER**

**John Ravindran Moses**
**Partner**
**Membership No. 028566**
**UDIN: 22028566ATWYSL5024**

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2022**

| RECEIPTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| **FOREIGN CONTRIBUTION A/C RECEIPTS** | | | **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | |
| To Bank Interest | 12,46,023 | 20,74,975 | **Programme Expenses:** | | |
| To Donation Calamity Relief | 32,88,211 | 10,97,719 | By Calamity Relief Expenses | 2,71,600 | - |
| To Donation children home maintenance | 74,89,768 | 80,11,725 | By Community Dev Child Care Expenses | - | 16,50,102 |
| To Donation Christmas Gift | 9,14,915 | 15,500 | By Community Dev Project Medical Care | 24,01,400 | 67,392 |
| To Donation - Church Expenses | 36,93,060 | 2,94,127 | **Administration Expenses:** | | |
| To Donation - Community Dev. Camps | 1,40,14,890 | 1,40,410 | By Bank Charges | 12,178 | 18,976 |
| To Donation Community Dev - Child Care | 27,60,138 | 8,85,728 | By Christmas Gift | 1,09,000 | - |
| To Donation General | 5,81,897 | 1,13,088 | By Salary & Allowances | 46,19,316 | 2,06,397 |
| To Donation HR Study Scholarship | 3,81,024 | - | By Evangelist & Volunteers | - | 19,955 |
| To Donation Medical | 85,86,728 | 22,32,738 | By Meeting Expenses | - | 21,580 |
| To Donation - Monthly Pledge | 90,94,677 | 39,03,094 | By Staff Medical Expenses | 4,48,131 | 26,14,470 |
| To Donation Music & Media | - | 1,03,651 | **Fund Payments:** | | |
| To Donation Training & Development | - | 6,00,011 | By Building Fund | - | 96,82,069 |
| To Donation - Vocational Training | 18,389 | - | **DOMESTIC PAYMENTS** | | |
| **Fund Receipts** | | | **Programme Expenses:** | | |
| To Building Fund | | 1,03,43,072 | By Calamity Relief Expenses | 13,62,035 | 1,00,000 |
| **DOMESTIC RECEIPTS** | | | By Gift to CM Fund | - | 5,00,000 |
| To Bank Interest | 2,51,31,122 | 3,18,46,943 | By Children Education Expenses | 77,25,668 | 1,08,50,396 |
| To Donation - Annual Meet | 2,08,390 | 82,012 | By Children HR Study Scholarship Exp | 44,57,873 | 62,10,898 |
| To Donation - Calamity Releif | 20,62,226 | 9,23,707 | By Christmas Gift | - | 2,92,25,909 |
| To Donation - Children Home Maintenance | 54,81,919 | 24,98,196 | By Church Expenses Support | 3,11,80,651 | 6,23,92,138 |
| To Donation - Christmas Gift | 3,34,39,703 | 3,53,75,458 | By Community Dev Camp Expenses | | |
| To Donation - Church Expenses | 4,90,37,913 | 6,09,99,160 | Training & Development | 22,29,757 | 30,68,003 |
| To Donation Community Dev - Camp | 83,90,846 | 90,77,432 | Community Dev Camp Expenses | 6,23,16,959 | 6,01,73,668 |
| To Donation Community Dev - Child Care | 14,84,06,048 | 14,44,53,893 | Linguistic Work | 74,218 | 70,500 |
| To Donation - Community Dev. Education | 44,70,091 | 28,46,900 | By Community Development Expenses | | |
| To Donation - Community Dev. Health Care | 24,810 | 2,18,890 | Medical Care | 19,85,163 | 20,00,200 |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2022

| RECEIPTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Donation Field Equipment | 10,26,341 | 2,93,336 | Child Care Expenses | 5,24,89,942 | 9,60,04,708 |
| To Donation - Adult Literacy | 9,300 | 1,440 | Educational Expenses | 6,30,914 | 6,55,196 |
| To Donation - Linguistic Work | 9,04,975 | 7,09,829 | Vocational Training Expenses | 2,39,075 | 8,39,348 |
| To Donation for Travel | 7,496 | 5,360 | Adult Literacy Expenses | 5,29,580 | 5,34,943 |
| To Donation General | 3,60,06,734 | 5,19,11,023 | By General, Hospitality & Maintenance | | |
| To Donation H.Q. Building | 3,100 | 2,10,000 | Mission Field | 28,30,782 | 41,44,699 |
| To Donation HR Study Scholarship | - | 14,91,383 | Unforeseen Expenses | 62,028 | 2,05,732 |
| To Donation Medical | 78,62,014 | 1,64,18,888 | By Medical Expenses | | |
| To Donation - Monthly Pledge | 32,92,34,281 | 33,58,62,537 | Mission Field | 76,84,451 | 1,30,80,574 |
| To Donation - Music & Media | 6,43,945 | 2,93,130 | By Meeting Expenses | | |
| To Donation Navodaya Meetings | 1,100 | - | Mission Field | 3,48,458 | 2,39,497 |
| To Donation through Field congregation | 32,610 | - | Annual Meet Expenses | 19,650 | 1,30,358 |
| To Donation - Training & Development | 76,400 | 34,15,572 | By Postage & Courier | | |
| To Donation - Vehicles | 36,77,250 | 29,45,106 | Mission Field | 2,92,742 | 2,90,898 |
| To Donation - Vocational Training | 13,03,800 | 24,600 | Magazine postage | 22,27,991 | 22,06,360 |
| To Miscellaneous Income | 3,05,799 | 1,49,656 | By Printing & Stationary | | |
| To Sale of Property land | - | 28,00,000 | Mission Field | 6,02,403 | 4,94,632 |
| To Sale of Vehicles | | 44,500 | Magazine Printing | 78,94,232 | 83,71,055 |
| To Interest on Income Tax Refund | | 55,251 | By Promotional Material Expenses | 26,45,735 | 57,04,908 |
| **Fund Receipts** | | | By Rent & Rates | | |
| To Appollo Education Project Fund | 6,600 | 6,600 | Mission Field | 67,14,335 | 1,03,68,256 |
| To Benevolent Fund | 6,07,950 | 12,97,810 | By Repairs & Renewals | | |
| To Building Fund | 20,04,665 | 23,38,728 | Mission Field | 39,62,760 | 77,40,671 |
| To Childcare Fund | 9,63,24,863 | - | By Salary & Allowances | | |
| To Capital Fund | - | 3,10,83,357 | Mission Field | 10,34,55,066 | 11,70,61,599 |
| To Children Hr Studies Scholarship Fund | 20,17,008 | 5,77,200 | By Staff Higher Study Expenses | 1,39,255 | 3,41,190 |
| To Endowment Fund Child Sponsorship | - | 4,43,000 | By Telephone & Trunk Calls | | |
| To Contigency & Emergency Relief Fund | 15,57,162 | - | Mission Field | 29,36,296 | 23,05,288 |
| To Endowment Fund Children Home | 2,78,500 | 34,600 | By Travelling Expenses | | |

Friends Missionary Prayer Band * 29, High School

K. Nelson

S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS FRN 01485S Chennai

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2022

| RECEIPTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Endowment Fund People Group | 38,400 | **8,00,000** | Mission Field | 95,94,330 | **1,24,80,306** |
| To Endowment Fund Missionary Support | - | **63,920** | By Vehicle Maintenance | | |
| To Endowment Fund - Magazine Life Subscribtion | 26,951 | **19,450** | Mission Field | 1,06,66,308 | **1,21,12,129** |
| To Magazine Life Subscription | 3,58,003 | **-** | **Administration Expenses:** | | |
| To Medical Reserve fund | 9,700 | **-** | By Audit Fees & Other Expenses | 39,140 | **1,18,000** |
| To Pension Fund | 14,50,599 | **80,66,504** | By Bank Charges | 2,08,315 | **2,30,311** |
| | | | By Christmas Gift | 2,73,01,404 | **-** |
| **Current Assets:** | | | By Contribution To EPF | 2,75,00,398 | **2,68,03,761** |
| To Tax Refund | 4,28,433 | **6,90,639** | By FBF Gift | 1,13,235 | **21,12,200** |
| To S B F Loan Recovery | - | **1,61,560** | By General, Hospitality & Maintenance | 30,55,807 | **33,87,855** |
| To FPF Loan Recovery | 1,26,460 | **96,890** | By Gratuity | 34,89,027 | **61,60,433** |
| To Staff Benefit Fund | 1,21,590 | **1,16,240** | By Interest Payable to EPF | - | **76,12,665** |
| | | | By Legal Fees | 1,26,700 | **3,89,765** |
| **Current Liabilities:** | | | By Medical Expenses | 66,25,410 | **86,84,794** |
| To Employees Provident Fund | 40,54,096 | **-** | By Meeting Expenses | 15,92,335 | **14,31,332** |
| To Project Advance Payable | 56,89,323 | **-** | By Office Maintenance | 33,94,540 | **27,19,614** |
| To TDS Payable | - | **5,765** | By Pension Expenses | 74,45,105 | **90,75,730** |
| | | | By Postage & Courier | 16,34,038 | **22,38,342** |
| **Investments:** | | | By Printing & Stationary | 26,90,722 | **53,81,300** |
| To Fixed Deposit Earmarked | - | **11,20,33,265** | By Rent | 2,38,62,291 | **2,54,25,759** |
| To Endowment Fund Deposit Misy Children HR Study | 9,250 | **11,30,649** | By Repairs & Renewals | 20,63,508 | **27,34,346** |
| To Endowment Fund Deposit - Life Member Public | 89,887 | **-** | By Salary & Allowances | 2,86,74,962 | **3,75,38,758** |
| To Endowment Fund Deposit Missionary Support | 10,45,600 | **22,42,198** | By SBF Gifts | 1,25,040 | **1,48,355** |
| | | | By Subscription To Other Missions | 15,000 | **-** |
| | | | By Insurance | 12,33,207 | **9,35,868** |
| | | | By Rates & Taxes | - | **1,87,428** |
| | | | By Telephone & Trunk Calls | 13,17,661 | **11,51,376** |
| | | | By Travelling Expenses | 17,85,048 | **23,83,939** |
| | | | By Vehicle Maintenance | 16,77,295 | **17,91,581** |

K. Nelson

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2022

| RECEIPTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Staff Welfare | | |
| | | | Holiday Allowance | 11,15,893 | 23,14,523 |
| | | | Warm Cloth Allowance | 28,14,600 | 24,06,600 |
| | | | Staff Welfare - General | 25,73,376 | 17,38,798 |
| | | | **Fund Payments:** | | |
| | | | By Building Fund | - | 42,76,585 |
| | | | By Capital Fund | 9,63,24,863 | - |
| | | | By Childcare Fund | - | 1,68,61,801 |
| | | | By Jeevandhara Fund | - | 1,442 |
| | | | By Medical Reserve Fund | - | 9,700 |
| | | | **Current Liabilities:** | | |
| | | | By Employees Provident Fund | - | 46,10,039 |
| | | | By TDS Payable | 6,997 | - |
| | | | By Payable To Staff for Marriage | 1,05,994 | 1,74,600 |
| | | | By Contribution To Impact | 4,400 | 1,600 |
| | | | By FPF | - | 44,20,030 |
| | | | By Interest Payable to EPF | - | 1,00,43,941 |
| | | | **Loans & Advances:** | | |
| | | | By Project Advance Recoverable | - | 1,13,85,745 |
| | | | By Advance to Staff for EPF Payment | 89,59,991 | 82,36,756 |
| | | | By Staff Benefit Fund Loan | 83,300 | 1,80,000 |
| | | | By TDS Receivable | - | 12,36,630 |
| | | | **Investments:** | | |
| | | | By Fixed Deposit General (Matured Amount) | 10,01,39,125 | 13,27,11,429 |
| | | | By Building Fund Deposit | 3,00,603 | 2,39,942 |
| | | | By Endowment Fund Deposit - Life Mem. Publicity | - | 22,336 |

K. Nelson

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2022**

| RECEIPTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. | PAYMENTS | 2020 - 2021 Amount in Rs. | 2021 - 2022 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Endowment Fund Deposit - Child Sponsorship | 2,67,846 | 2,92,934 |
| | | | By Endowment Fund Deposit People Group | - | 8,51,910 |
| | | | By Endowment Fund Deposit - Missionary Suppor | 12,97,709 | - |
| | | | By Endowment Missionary Children Hr Study | 5,50,091 | - |
| | | | By Fixed Deposit Earmarked | 8,78,77,355 | - |
| | | | **Property, Plant & Equipment:** | | |
| | | | By Assets Purchased | 3,43,94,846 | 3,90,25,823 |
| Sub Total | 82,60,62,975 | 89,59,78,412 | Sub Total | 81,79,47,456 | 87,38,71,674 |
| To Opening Balance | | | **By Closing Balance** | | |
| To Cash at Bank A/c | 88,11,392 | 1,98,04,064 | By Cash At Bank A/c | 1,98,04,064 | 4,14,12,244 |
| To Cash at Bank church A/c | 53,04,508 | 45,49,726 | By Cash At Bank Church A/c | 45,49,726 | 41,49,299 |
| To Cash at Bank fcr A/c | 1,07,79,645 | 1,58,45,955 | By Cash At Bank FCR A/c | 1,58,45,955 | 1,13,73,262 |
| To Cash at Bank Field A/c | - | 50,85,080 | By Cash At Bank Field A/c | 50,85,080 | 42,24,281 |
| To Cash at Bank fund A/c | 2,56,34,768 | 1,30,52,443 | By Cash At Bank Fund A/c | 1,30,52,443 | 1,87,53,592 |
| To Cash on Hand A/c | 1,29,476 | 4,38,040 | By Cash On Hand A/c | 4,38,040 | 9,69,368 |
| TOTAL | 87,67,22,765 | 95,47,53,720 | TOTAL | 87,67,22,765 | 95,47,53,720 |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For J S A S & Associates**
**Chartered Accountants**
**(Firm Registration No. 014859S)**

Friends Missionary Prayer Band * 29, High School Road, Ambattur, Ch-53 *

J S A S & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

**Place : Chennai**
**Date : 05.09.2022**

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

**L. NELSON**
**TREASURER**

**John Ravindran Moses**
**Partner**
**Membership No. 028566**
UDIN: 22028566ATWYSL5024

1
நவம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. கய்தியன்கின் வெய்ஃபெய்
திரு. தாங்லால் ஸௌ
திருமதி. மேரி முர்மு தினேஷ்

## ஜம்மு

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** சுவிசேஷம் 730 பேருக்கு பகரப்பட்டுள்ளது. 3 புதிய நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புலம் பெயர்ந்தோர் மற்றும் இசாயி இனமக்கள் மத்தியில் 2 புதிய ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருந்த சோனுவின் குடும்பம் தற்போது தங்களது வீட்டில் ஆராதனை நடத்த மிஷனெரிகளை அழைத்துள்ளனர். தீய ஆவியின் பிடியிலிருந்து மம்தா தேவி விடுபட்டுள்ளதோடு, தொடர்ச்சியாக வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் துவங்கியுள்ளார். சுமாவின் ஜெபத்திற்கு கனம் உண்டாகும் பொருட்டு, அவரது விருப்பப்படி ஒரு கிறிஸ்தவரை மணந்துகொள்ள தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மிஷனெரிகள் மேலும் கூடுதலாக பஞ்சாபி மற்றும் டோக்ரி மொழிகளை ஊழிய வளர்ச்சிக்கென கற்றுக் கொள்ள; நரோத் பகுதியில் வாழும் இமாஷா சமுதாயத்தினர் மத்தியில் சுவிசேஷத் திற்கு இருக்கும் தடைகள் யாவும் விலக; மக்களைக் கிறிஸ்துவண்டை சேரவிடாமல் தடைசெய்யும் கயன்சிங் பதனியா மனம் மாற; திட்டமிட்டிருக்கிறபடி 13000 புதிய மக்களுக்கு இயேசுவை அறிமுகப்படுத்தவும், 120 பேரை கிறிஸ்துவண்டை கொண்டு வரவும் எடுத்திருக்கும் தீர்மானத்தில் உறுதி யாய் நின்று செயல்பட; திருமணமாகி 2 வருடங்களாகியுள்ள ரிஷு & மோனிகா மற்றும் 20 வருடங்களாகியுள்ள பல்வீர் தம்பதியர் குழந்தை பாக்கியங்கள் பெற்றிட; கடந்த 2 வருடங்களாக தொடர்ந்து உடல் நடுக்கத்தினால் அவதிப்பட்டுவரும் காந்தா தேவி சுகம் பெற; விபத்தினால் தலையில் ஏற்பட்டிருக்கும் காயத்தின் பொருட்டு தனது பேச்சுத்திறனை இழந்திருக்கும் ஆகாஷிற்கு மீண்டும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அவர் பூரண சுகமடைய; பில்லர் ஆராதனைக்குழு மீண்டும் தொடங்கப்பட; நமது விசுவாசிகளைத் திசைதிருப்பும் உள்ளூர் போதகரான ஜெயபால், தன்னார்வ ஊழியர்களான ரோமி குமார் மற்றும் விகாஸ் மகோத்ரா மனந்திரும்ப; தொழுநோயினால் தனது விரல் நகங்கள் முழுவதையும் இழந் திருக்கும் கமலேஷ் சுகம் பெற ஜெபிப்போம்.

## தேவன் நல்கிய புதுவாழ்வு!

*மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். பம்லாபட் கிராமத்தைச் சார்ந்த 40 வயது பெண்ணான சாயாபாய் திடீரென சரீர பெலவீனத்திற்குள்ளானார். அவர் சரீரம் வீங்கி, மூச்சு விட முடியாமல் திணறினார். அவர் வாழும் கிராமம் காட்டுப்பாங்கான இடத்திலிருப்பதால், சரியான சாலை வசதிகள் ஏதுமில்லை. மாற்றுப்பாதையும் அதிக மழையினிமித்தமாக சகதி நிறைந்ததாய் இருசக்கர வாகனம் கூட செல்ல முடியாதபடி மிக மோசமான நிலையில் இருந்தது. சாயாபாயின் உடல்நிலையோ மிகவும் ஆபத்தான கட்டத் திற்கு சென்றுக் கொண்டிருந்ததால், அவரது குடும்ப மக்கள் கனகஷ்டத்துடன் ஒருவழியாக அவரை அருகிலுள்ள மருத்துவரிடம் தூக்கிச் சென்றனர். மருத்துவரும் சிகிச்சையளித்தார். விசுவாசிகளும், குடும்பத்தினரும் அவருக்காக அழுது ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு புதுவாழ்வு நல்கினார். அல்லேலூயா!*

**2**
**நவம்பர்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ஆனி:

**ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்**

**துதிக்க:** கடும் மழையிலிருந்தும், நிலச்சரிவிலிருந்தும், அவ்வப்போது பாறைக்கற்கள் உருண்டு விழுவதினால் உண்டாகும் ஆபத்துகளிலிருந்தும் நமது மிஷனெரிகளை தேவன் பெரிதும் பாதுகாத்து வருகின்றார். சுமேஷ் குமார் கிறிஸ்துவின் நாமத்தை வெளிப்படையாக விசுவாசத்தோடு தைரியமாக அறிக்கை செய்துள்ளார். நேத்தார் சிங் மற்றும் தாருராம் விஷப்பூச்சியின் கடியினால் உண்டான பிரச்சனையிலிருந்து அதிக ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றுள்ளனர். தீய ஆவியின் பிடியினால் அதிக சுகவீன மாயிருந்த மனேஷ் குமார் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சகுந்தலாவிற்கு குல்லுவில் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கும், முதியோர் ஓய்வூதியத்திற்கான மருத்துவச்சான்றிதழை அவர் பெற்றுக்கொள்வதற்கும் வழிவாசல்கள் திறக்கப்பட; காஞ்சன், ஷில்பா தேவி மற்றும் சிமுதேவி தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; விக்ரனிற்கு ஏற்பட்டிருக்கும் கண்பிரச்சனையிலிருந்து சுகம் கிடைக்க; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் தஞ்சம் புக ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பகரப்பட்டுள்ளது. 4 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். சங்ரி குராடி, சன்சாக், தீமிச் ஆகிய கிராமங்களில் ஜீப்குழு ஊழியம் சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளது. குறிப்பாக சத்தா கிராமத்தில் வைத்து ஜீப்குழு ஊழியம் நடந்தபோது, ஜீப் ஓட்டுனர் அனித் மலைச்சரிவில் தவறி கீழே விழுந்தபோதிலும், எவ்வித சேதமுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளார். அதிகச் சிரமங்களின் மத்தியில் பிங்கிக்கு நல்லதொரு அரசாங்க உத்யோகம் கிடைக்க தேவன் பாராட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ரனோல் சபை விசுவாசிகள் ஒற்றுமையிலும், ஜெபத்திலும், சுவிசேஷத்தைப் பகர்வதிலும் வளர; பஷியாலால் தீய ஆவியின் பிடியிலிருந்தும், பவி மூச்சுத்திணறல் மற்றும் தீய ஆவியின் தொந்தரவிலிருந்தும் சுகவிடுதலை பெற; வயிற்று வீக்கத்திலிருந்து மனிஷாவின் பச்சிளங்குழந்தை சுகம் பெற; சத்தா கிராமத்தில் சுவிசேஷத்தை எடுத்துச்செல்வதற்கு சவாலாகக் காணப்படும் தடைகள் யாவும் நீங்க; நமது சுதேச ஊழியரொருவரின் மனைவி குழந்தை பாக்கியத்திற்கென எடுத்துக்கொண்டிருக்கும் சிகிச்சை நற்பலனளிக்க ஜெபிப்போம்.

## 3 நவம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மார்கரெட் ஜோதிமணி ஆசீர்
திருமதி. ரேச்சல் ரமேஷ்பாய்

# பஞ்சாப்

## பட்டிண்டா:
### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** புதிதாக 11 ஆத்துமாக்கள் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டு, அவரது மந்தையில் இணைக்கப்பட்டுள்ளனர். மூச்சுவிட இயலாது மிகவும் மோசமான நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பச்சிளங்குழந்தையான ரேஹ்மத் தொடர் ஜெபத்தின்மூலமாக அற்புத சுகம் பெற்றுள்ளது. 15 வருடங்களாக ஜெபத்திலே காத்திருந்த பலியான்வாலி கிராம ராஜாசிங்கிற்கு தகுந்த வாழ்க்கைத்துணை அமைந்துள்ளது. மௌர் மண்டி ஆலயத்தில் கண்காணிப்பு கேமரா நமது விசுவாசிகளின் சொந்த பணஉதவியால் சிறந்த முறையில் பொருத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவிருக்கும் சத்சங் கூடுகைகள், 4 இயேசுத்திரைப்பட நிகழ்ச்சிகள், சிறுவர், வாலிபர் மற்றும் பெண்களுக்கான ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெற; மௌர் மண்டி கிராம தர்சம் சிங் 8 வருடங்களாக அவதிப்பட்டுவரும் தீராத முதுகுத் தண்டுவட வலியிலிருந்து முழு சுகமடைய; பாய்பகதூர் கிராம அமன்தீப் கௌர் 4 மாதங்களாக இருக்கும் மூச்சுத்திணறல் பிரச்சனையிலிருந்தும், நமது ஊழியர் பிரதாப் ரஹாங்கின் மனைவி ரேஷ்மி வாதநோய்ப் பிரச்சனையிலிருந்தும் விரைவில் நல்ல சுகம்பெற ஜெபிப்போம்.

## பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்

**துதிக்க:** சுவிசேஷத்தின்மூலம் 1500 நபர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. தபா மண்டி மற்றும் தனவ்லா பகுதிகளில் பெரிதளவிலான சத்சங் கூடுகைகள் நடைபெற்றுள்ளன. புதிதாக 2 கிராமங்களில் 3 இடங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. செஹ்னா, லைன் சைடு மற்றும் தில்வா பகுதிகளில் சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டு, அதன்மூலம் 2 புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். தனவ்லா துணை மையத்தில் முதல்முறையாக கிறிஸ்தவ முறையில் அடக்க ஆராதனை மன்தீப் கௌருக்கு நடத்தப்பட்டுள்ளது. தனவ்லா கிராம சந்தீப் கௌரின் மகளான ஜஸ்வீர் கௌர் தனது B.Tech., பட்டப்படிப்பை முடித்து, மேற்கல்வி படிப்பிற்குச் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பந்தர் மற்றும் ஜக்ஜீத்புரா கிராம மக்கள் சுவிசேஷத்திற்குச் செவி சாய்க்க; குழந்தை பருவத்திலிருந்தே 15 வருடங்களாக வலிப்பு நோயினால் கஷ்டப்பட்டுவரும் கரண் அற்புத சுகமடைய; தங்களது 18 வயது மகளான மன்தீப் கௌரை இழக்கக்கொடுத்திருக்கும் மூர்த்தி கௌரின் குடும்பத்தார் தேவஆறுதல் பெற; மன்பிரீத் கௌர் மற்றும் மஞ்சு கௌரின் குடும்பத்தினர் தீய ஆவிகளின் தொல்லைகளிலிருந்து விடுதலை பெற; சந்தீப் கௌர் புற்றுநோயிலிருந்தும், பல்ஜீந்தர் கௌர் வயிற்றுவலி மற்றும் நோய்த்தொற்றிலிருந்தும் சுகமடைய; கரண், சோம்நாத், ராகுல், மன்பிரீத், பிரேம் ஆகியோருக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

**4 நவம்பர்**
**வெள்ளி**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. முத்தா ரத்னகுமாரி சதீஷ்
செல்வி. பாபதி வசந்தா, திருமதி. ப்ரீதிலதா பாசுரு

### மான்சா:

### ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** கதால் மற்றும் குலா சிக்கா கிராமங்களைச் சார்ந்த 700 பேருக்கு முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சத்சங் கூடுகையொன்று சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது. 5 புதிய ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். குர்னேகாலா கிராம 3 வயது குழந்தையான மான்சிங் கௌர் மற்றும் குலா சிக்கா கிராம சுனிதா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட்டுள்ளனர். குரடி கிராம ஜெல் கௌர் பக்கவாதநோயிலிருந்தும், மம்தா இருதயக்கோளாறிலிருந்தும் அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திவான் சிங், ககன்தீப், சுக்விந்தர், மோனா கௌர், ஜெகதீஷ், விஷால், சஞ்சு, உஷா ஆகியோர் இரட்சிக்கப்பட; ஜெல்கௌர் புற்றுநோயிலிருந்தும், சுக்ஜைன் கர்ப்பப்பை கட்டியிலிருந்தும், ராகுல் கண் தொற்றுநோயிலிருந்தும், தரியாபூர் கிராம பிந்தர் கௌர் நரம்பு அடைப்பு பிரச்சனையிலிருந்தும், மங்கல் பித்தப்பைகல் பிரச்சனையிலிருந்தும், ராஜ்வீர் நுரையீரல் தொற்று மற்றும் தொடர் காய்ச்சலிலிருந்தும் சுகம் பெற; ஒரு மாத குழந்தையான நவ்ரீத் வலிப்பு நோயிலிருந்தும், ஒரு வயது குழந்தையான பரஸ் கல்லீரல் பிரச்சனையிலிருந்தும் அற்புத சுகமடைய; சின்னா, குல்ரியான் மற்றும் லெஹ்லான் காலன் பகுதிகளில் விரைவில் ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால், தீப்திலால் மாலி & ரேணுமா சாடங்கி

**துதிக்க:** சுவிசேஷக்குழு மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் சுமார் 35-க்கும் மேலானோர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். 4 புதிய குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். 2 சத்சங் கூடுகைகள் ஜகிரா ரோடு மற்றும் கனக் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டதின் விளைவாக 160 பேர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளதோடு, ஒரு குடும்பம் கிறிஸ்து வண்டை நெருங்கியுள்ளது. பொகிர் மற்றும் சங்குவால் பகுதிகளில் இயேசுத்திரைப்படம் காண்பிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷக்குழுவினர், சபை மூப்பர்கள், சிறியளவு ஜெபக்குழுவினர் மற்றும் புதிய விசுவாசிகள் ஆகியோருக்கென நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் 4 பங்கேற்பாளர்கள் ஊழியத்தில் உற்சாகமாக ஈடுபட ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர். மன்பிரீத் கௌர், சியாம்பதா கௌர், பூஜா கௌர் ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இம்மாத ஆத்தும இலக்கான 600 நபர்களை இரவுநேர ஜெபக்கூடுகைகள், வாலிபர் கூடுகைகள், சிறுவர் கூடுகைகள், வேதாகம வகுப்புகள் மற்றும் 2 ஜெபக்குழுக்கள் மூலமாகக் கண்டெடுக்க; வரும்நாட்களில் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டிராத மக்களைச் சந்திப்பதற்கென நடத்தவிருக்கும் ஒரு வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியும், 3 சத்சங் கூடுகைகளும், 3 இயேசுத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளும் நல்லமுறையில் நடந்து முடிய; சபை அங்கத்தினர்களான மன்பிரீத் கௌர், சுமன் கௌர் மற்றும் அஜய் சிங் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து முற்றிலுமாக விடுபட; ககன் கௌர் மற்றும் தீப்சிங் குடும்பங்களுக்கிடையே காணப்படும் நீதிமன்ற வழக்கு சுமூகமான முறையில் தீர்வு பெற்று, அவர்கள் மத்தியில் தேவ சமாதானம் நிலவ; தங்களது சொந்த குடும்பத்தலைவர்களால் சுவிசேஷ குழுவினரோடு இணைந்து சுவிசேஷப்பணி மற்றும் சபைச்செயல்பாடுகளில் ஈடுபட எதிர்ப்புகளைச் சந்தித்துவரும் அக் குழுவினர்களுக்காக ஜெபிப்போம்.

## 5 நவம்பர்
### சனி

### சங்ரூர்: கிம்பால் திலீப்பாய், ஜோதி ரஞ்சன் பார்தன்

**துதிக்க:** பிசாசின் பிடியிலிருந்து பரம்ஜீத் கௌர் விடுவிக்கப்பட்டுள்ளார். கால் வீக்கம் மற்றும் வயிற்று தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த பூபேஷ் 12 மணி நேர ஆராதனையின்போது ஏறெடுத்த தொடர் ஜெபத்தினாலும், தான் மேற்கொண்டுவரும் மருத்துவ சிகிச்சையினாலும் உடல்நலத்தில் முன்னேற்றம் பெற்றுள்ளார். கக்ரா கிராம சுனிதா கௌர் ஜெபக்கூடுகையின்போது கீழே விழுந்ததினால், தனது ஒருபக்க சரீரம் செயலிழந்த நிலையிலிருந்து அநேக நாட்களாக தனது சுகத்திற்காக ஜெபிப்பதின் விளைவாகவும், மருத்துவ சிகிச்சையின் மூலமாகவும் தற்போது நற்சுகமடைந்து வருகிறார். ஆலய ஆராதனையில் 4 புதிய குடும்பங்கள் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். நட்வார் சிங் மனந் திரும்பி இயேசுவைப் பின்பற்றுவதோடு, அவருக்காகவே வாழ்வேன் என்ற உறுதி யோடும் தனது விசுவாசப்பயணத்தைத் துவங்கியுள்ளார். வீட்டைவிட்டு வெளியேறிய ஜோதி மீண்டும் பத்திரமாகத் தன் வீடு திரும்பியுள்ள கிருபைக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சீக் இனமக்கள் மத்தியில் நாளுக்குநாள் கடினமாகிவரும் ஊழியக் காரியங்கள் இலகுவாகுவதற்கான ஜெபமுயற்சிகள் யாவும் வாய்க்க; கக்ரா கிராமத்தைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளரான ஆசியா சாதிக் மாந்திரீக தொழிலில் ஈடுபட்டுவரும் தனது மைத்துனரின் மூலம் சந்தித்துவரும் குடும்பப்பிரச்சனைகளிலிருந்து விடுபடவும், அவர்கள் யாவரும் இயேசுவின் அன்பை ருசிக்கவும்; சங்ரூர் சபையில் ஆண்களுக் கெனவும், பெண்களுக்கெனவும் தனித் தனியே 4 புதிய ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட; சபை ஆராதனைக்கு வரமுடியாமல் இருக்கும் சரஞ்சித் கௌரின் குடும்பத்திற்காக; சீத்தல், ஜோதி, லக்விந்தர் சிங், பிந்தர் சிங் ஆகியோருக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் தேவதூய நியமப்படி ஏற்றவேளையில் அமைய; சத்துருவின் பிடியினால் தனது வீட்டிற்குள் நிழல்போன்ற உருவங்களை அவ்வப்போது காண்பதினால் படுத்தப்படுக்கையாகிக் கிடக்கும் பாரூ விரைவில் சுகமடைய ஜெபிப்போம்.

# ஹரியானா

### கலான்வாலி: விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** முதல்முறையாக 100 பேருக்கு சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புதிதாக ஒருநபர் தனது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்து, அவருடைய மந்தையில் இணைந்துள்ளார். 17 இரவுநேர ஜெபக்கூட்டங்களும், ஒரு வாலிபர் கூடுகையும், ஒருநாள் உபவாச ஜெபக்கூடுகையும் மற்றும் ஒரு சத்சங் கூடுகையும் நடத்தப்பட்டுள்ளன. நமது சபை மூப்பரான மோதிராம் தோல் அழுகும் ஒருவித நோயினால் (Forniers Gangrene) மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும் ஜெபத்தின் மூலமாகவும், ஏற்ற சிகிச்சையின் மூல மாகவும் சுகமாகி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தகத்மால் கிராமத்தில் வசிக்கும் இக்பாலின் குடும்பம் தங்களது விசுவாசத்தை தைரியமாக அறிக்கை செய்ய; புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் கிராம மக்கள் அதற்கு நன்கு செவிசாய்க்க; கலான்வாலி கிராமத்தைச் சார்ந்த ராகேஷ் குமார் தீராத வயிற்றுவலியிலிருந்து முழுமையான சுகம் பெறவும், அவரது குடும்பத்தில் குழந்தை பாக்கியம் அருளப்படவும் ஜெபிப்போம்.

## 6 நவம்பர்
### ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கிறிஸ்டி ராஜன்

செல்வி. மய்னா மிலி

## தோஷம்:

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** புதிதாக 3 ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். சுவிசேஷம் 2 கிராமங்களில் முதல்முறையாகப் பறைசாற்றப்பட்டுள்ளன. கய்பிபூரில் வைத்து குழு அமைப்பிலான பெண்கள் தலைவர் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டுள்ளது. வாலிபர்களுக்கென வேதாகம வகுப்புக்குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சக்குவான் கிராமத்தில் நமக்குப் புதிய தொடர்பாளர்களை தேவன் தந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜீன்த் மற்றும் தோஷம் பணித்தள மூப்பர்களுக்கு சரியான ஊழியப்பயிற்சி அளிக்கப்பட; ராஜ்பால், சீதா ராம், கக்கு குடிப்பழக்கத்திலிருந்தும், குர்பிரீத் கைபேசி அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட; சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டிவரும் அஜய், பல்வான், ஆஷிஷ், சட்டு ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய; எதிர்ப்புகளின் மத்தியில் நடைபெறும் சிறுவர் வேதாகம வகுப்புகள், பெண்கள் ஜெபக்குழுக்கள், சத்சங் கூடுகைகள், இரவுநேர ஜெபக்கூட்டங்கள் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூட்டங்கள் யாவும் அமோக பலன் தர ஜெபிப்போம்.

# உத்தராகண்ட்

## மல்தன்சோர்:

**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். 4 கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 புதிய ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெண்கள் முகாமொன்று சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. தோமார் என்ற புதிய மக்களினம் மத்தியில் ஊழியம் தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிருமதாரா மற்றும் ராம் நகர் பகுதிகளில் நமது ஊழியங்களை விரிவாக்கம் செய்யும் திட்டம் வெற்றிகரமாக அமைய; ஜங்கீர் சிங், கீதா, ஆரி பகவதி மற்றும் உமா தேவி தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; ராஜு, கந்தன் மற்றும் பல்விந்தர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; சுக்கிந்தர், சரஞ்ஜீத், ரோகித், சுகானி, ஆனந்தி, ஜெய்பால், தாருவதி, மஸ்த்ராமன், விஷால் ஆகியோர் தைரியமாக தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்ய ஜெபிப்போம்.

**7 நவம்பர்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. பாலசுப்ரமணியன் (ஏ) சைமன் பீட்டர்

### நானக்மட்டா:
**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் பகரப்பட்டுள்ளது. ஒரு புதிய நபர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். 10 சத்சங் கூடுகைகளும், 5 வீட்டு ஜெபக்கூட்டங்களும், 4 உபவாச ஜெபக்கூடுகைகளும், 4 இரவுநேர ஜெபக்கூடுகைகளும் கிரமமாக நடத்தப்பட்டுள்ளன. வீட்டு மளிகைப்பொருட்கள் வாங்க பணமில்லாதபோது சத்மனின் குடும்பம் ஏறெடுத்த ஜெபத்தின் விளைவாக தேவன் அவர்களது தேவையை அற்புதமாகச் சந்தித்துள்ளார். ரிங்கு கோழிப்பண்ணை ஒன்றை துவங்க தேவன் ஈந்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவைக் குறித்து தவறான தகவல்களைக் கொடுத்து நமது விசுவாசிகளை குழப்பும் சிந்துகௌர் மனந்திரும்பவும், நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும்; தனது மனைவியை விவாகரத்திற்குக் கட்டாயப்படுத்தும் அஞ்சலியின் கணவர் மனம்மாறி, அவருடன் இணைந்து வாழ; சிங்கம், புலி போன்ற கொடிய விலங்குகளிடமிருந்து நமது விசுவாசிகளையும் அவர்களது கால் நடைப் பிராணிகளையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### ஸ்ரீ கங்காநகர்: போடார்
**அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி சுவிசேஷமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புதிதாக ஒருநபர் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் தஞ்சம் புகுந்துள்ளார். 2 இடங்களில் வேதாகம வகுப்புகளும், 3 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்பணிகளும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. அதிக நாட்கள் காய்ச்சலினால் கஷ்டப்பட்டுவந்த ஜெய்சாந்த் தனக்குத்தானே ஜெபித்த ஜெபத்தின்மூலமாக தேவன் அவருக்கு தந்துள்ள பூரண சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின்மீது அக்கறை காட்டுகின்ற ரூபாஜி, அங்ரஜ் மற்றும் அக்னம் தைரியமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய விசுவாச மந்தையில் இணையவும்; லோஹறா, 16S, 5H, கோனி, மூடா, 4FF, மஜிவாலா கிராம விசுவாசிகள் யாவரும் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய; ஹனுமன் மற்றும் ஜஸ்பால் குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

**8 நவம்பர்**

**செவ்வாய்**

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** மின்சார உதவியுடன் இயங்கக் கூடிய ரிக்ஷா வண்டி மற்றும் ஆட்டோவிற்கு இடையில் சிக்கிக்கொண்ட தனலக்ஷ்மி அப்பெரும் ஆபத்தான விபத்திலிருந்து தேவகிருபையால் உயிர் தப்பிப்பிழைத் துள்ளார். வேலூரிலிருந்து வந்த குழுவினரைக் கொண்டு நடத்தப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம் அங்குள்ள வாலிபர்களுக்கு நமது ஊழியத்தைக் குறித்த காரியங்களும், அவர்கள் எவ்வாறு இவ்வூழியத்தில் ஈடுபட வேண்டும் என்பதைக் குறித்த காரியங்களும் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டுஆராதனையின்போது 2 வாலிபர்கள் முழுநேர ஊழியர்களாக தங்கள் வாழ்வை தேவனுக்கென அர்ப்பணித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராபின் சவன் மற்றும் சந்தர்பால் ஆகியோரின் இழப்பினால் தவிக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு தேவஆறுதல் கிடைக்கவும், அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவில் விசுவாசமாயிருந்து நமது ஊழியங்களுக்கு உதவிக்கரம் நீட்டவும்; நமது சஜ்வான் நகர் ஆராதனைக்குழுவினருக்கு தேவனை ஆராதிக்க தகுந்த இடமொன்று கிடைக்க; பூனம், ராஜா, பிரீத்தி, நேகா, ரோஷன் மற்றும் ஆஷிஷிற்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய; தவறான மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் காரியங்களில் ஈடுபட்டிருக்கும் நமது புதிய விசுவாசிகள் அச்செயல்களிலிருந்து விடுபட; சுபாஷ் மற்றும் சுரேஷ் வலிப்பு நோயிலிருந்தும், கிருஷ்ணன் விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் உண்டான வாய்ப்பேச இயலாமை பிரச்சனையிலிருந்தும், சுனில் மசிஹ் சிறுநீரகக்கோளாறிலிருந்தும், ஓம்பிரகாஷ் சிறுநீரகம் மற்றும் நுரையீரல் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற; மோகித்தும், ஆகாஷும் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபட; முதியோர்களுக்கும் எழுத்தறிவில்லாதவர்களுக்கும் 35 ஒலிவழி வேதாகமங்கள் பகிரப்பட ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

## பன்சி:

### கோங்கா கிரி பாபு & லூர்து மேரி

**துதிக்க:** சுவிசேஷம் ஒரு கிராமத்தில் முதல் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். நீட்டுவை தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் மீட்டுள்ளதால், அவர் தற்போது நமது ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்து கொள்கிறார். 15 கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் நடத்தப்பட்டதின் விளைவாக, அக்கிராம மக்களிடமிருந்து சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்டுள்ள நந்திப்புரா மந்திரவாதி இயேசுவை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளவும், அவருடைய அனுமதியின் பெயரில் அக்கிராமத்தில் நமது ஊழியர்கள் இயேசுத் திரைப்பட ஊழியம் நடத்தியதின் பொருட்டு, அங்கே உருவாக்கப்பட்டுள்ள சிறிய ஜெபக்குழுவொன்று சீராக தொடர்ந்து இயங்கவும்; சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பிறகும், தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட தயங்கும் மக்கள் தைரியமாக கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

**9**
**நவம்பர்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. செல்லத்துரை J.
திரு. ஜெரால்டு சேவியர்

## மோட்:

### திலக் & எமிமாள்

**துதிக்க:** புதிதாக சுவிசேஷம் 25 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளது. 25 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியமும், 5 இடங்களில் சத்சங் கூடுகைகளும், சுதேச ஊழியர் பயிற்சிக் கூடுகையொன்றும், 4 இடங்களில் புதிய விசுவாசிகளுக்கான கூடுகைகளும் முறையாக நடத்தப்பட்டுள்ளன. பன்னாரி கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் தவறாமல் நடைபெறுவதின் மூலமாக சிறிய ஜெபக்குழுவொன்று அங்கே உருவாக்கப்பட்டு, அதில் 30 பேர் கிரம மாகக் கூடி ஜெபித்து வருகின்றனர். பால் தராமலிருந்த பசுமாடு ஜெபத்திற்குப்பின் மீண்டும் பால் தர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியர்களை அந்நிய தேவர்களின் நாமங்களை உச்சரிக்கச்சொல்லி கட்டாயப்படுத்திய அந்தாரி கிராம மக்கள் இயேசுவின் அன்பை கண்டுகொள்ள; சோனா, சவ்ரா, கில்லி, மங்கூரா மற்றும் பசோவால் ஆகிய கிராம மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்க; தங்களது பேரனை இழந்து தவிக்கும் சிவநாராயண் குடும்பத்தாருக்கு தேவன் நல்ல ஆறுதலைக் கட்டளையிட; மனநிலை பாதிப்பிலிருந்தும், பிசாசு பிடியிலிருந்தும் ரங்கோபால் சுகவிடுதலை பெற ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

## பிந்த்:

### பிமல் சந்திர முர்மு & சீத்தாமணி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. ஒருவர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். தர்மேந்திரா கௌசல் கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானித்துள்ளார். நீதிமன்றத்தில் 8 வருடங்களாக வழக்கிலிருந்த தனது வீட்டை முன்னிமாசி ஜெபத்தின் மூலம் திரும்ப கிடைக்கப்பெற்றுள்ளார். மம்தா சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், அமித் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் சுகமாகியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்நிதியாண்டின் இறுதிக்குள் 100 ஆத்துமாக்களைக் கண்டெடுக்கும் இலக்கில் தொடர்ந்து முன்னேற; சுவிசேஷப்பணி செய்ய அர்ப்பணிப்பு மிகுந்த சுதேச ஊழியரொருவரும், தன்னார்வ ஊழியரொருவரும் கிடைக்க; அஞ்சனா தோல் வியாதிப் பிரச்சனையிலிருந்தும், மம்தா இரத்தக் கட்டிப்பிரச்சனையிலிருந்தும் சுக மடைய; ஊர்மிளாவும் லய்க்ராமும் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; ரிங்கு, பிரியங்கா, கம்லேஷ், ராஜேந்திரா, உத்தம் ஆகியோரின் குடும்பத்தினர் மற்றும் சஞ்சு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருடைய மந்தைக்குள் இணைய ஜெபிப்போம்.

## 10 நவம்பர்
**வியாழன்**

### பாக்லி:
### D. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** சுவிசேஷம் 4 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 14 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். ஒரு புதிய திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளது; அதில் சுமார் 40 நபர்கள் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகின்றனர். மிகுந்த தேவ கிருபையால் ஊழியத்திற்கு வந்த எதிர்ப்புகளை நமது ஊழியர்களும், விசுவாசிகளும் சாமர்த்தியமாகக் கையாண்டுள்ளனர். 2 பெண்கள் முகாம்களும், 2 முக்கிய விசுவாசிகளின் பயிற்சி நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போட்லா கிராம திருச்சபையினரிடையே எதிர்ப்பைக் காட்டும் தெந்துபாயும், தகாடி கிராமத்தில் நமது ஊழியத்தை எதிர்க்கும் அக்கிராமத்தலைவர் முகேஷ்பாயும் மனந்திரும்பி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது ஊழியத்திற்கு பெரும் தடையாகக் காணப்படும் சாராயம் காய்ச்சி, அதை விற்பனைச் செய்து, குடிக்கும் பழக்கமானது அம்மக்கள் மத்தியில் முற்றிலும் நிறுத்தப்பட; சுசிலாபேனும், ரத்துபேனும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற; பீல் சமுதாயத்தினரை தொன்றுதொட்டு பின்பற்றிவரும் கொர்கு இனமக்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டுவதோடு, கிறிஸ்துவை கூட்டங்கூட்டமாக ஏற்றுக்கொள்ள; நமது ஜீப்குழு ஊழியம் மிகுந்த ஆவிக்குரிய பலனுள்ளதாய் அமைய ஜெபிப்போம்.

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** புதிய சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக 18 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 70 பேர் பங்கேற்கும்வண்ணம் கட்டி என்ற கிராமத்தில் புதிதாக இரவு ஜெபக்கூட்டமொன்று துவங்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவை அறியாத அத்தரிபாய் பாம்புக்கடியினால் அல்லல்பட்டபோது, அவரது கணவர் நமது ஊழியரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக்கொண்டதின் விளைவாக, நமது ஊழியரின் ஜெபத்தினால் அப்பெண்மணி ஆபத்தேதுமின்றி சுகமடைந்தார். இக்கோதியா கிராம ஜின்ஜிலிபாய் தீராத வயிற்று வலியினாலும், நெஞ்சு வலியினாலும் மற்றும் மூச்சுத்திணறலினாலும் பாதிக்கப்பட்டதினால், பல்வேறு மாந்திரீக முயற்சிகளை மேற்கொண்டும் பயனேதுமில்லாமல், இறுதியில் நமது சுதேச ஊழியர்கள் அவருக்காக ஜெபித்தபோது அவர் பூரண சுகமடைந்து, கிறிஸ்துவின்மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கைசெய்ய தேவன் ஈந்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிலாலா இனமக்கள் வாழும் தேரா கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்றுக்கொண்டிருக்கும் உபத்திரவங்கள் மறையவும், அந்த உபத்திரவங்களின் மிகுதியினால் அக்கிராம மக்களால் தாக்கப்பட்டிருக்கும் தினேஷ் பிலாலின் குடும்பம் மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் வேறொருவரும் விரைவில் பூரண குணமடையவும்; அங்குள்ள விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் திடமாக நிலைத்து நிற்கவும், உபத்திரவம் கொடுப்போர் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும்; வயிற்றுக்கட்டியிலிருந்து ஜெய்ராம் சுகமடைய; உரய்கதா, நகிரா, மோகன்பூர் மற்றும் ஜமுனாதேரா ஆகிய கிராமங்களில் பிற சபை சார்ந்த கிறிஸ்தவர்கள் நமது விசுவாசிகளை தொந்தரவு செய்து குழப்பத்திற்குள்ளாக்கி கொண்டிருக்கும் சூழ்நிலை மாற; தங்களது பழைய வழிபாட்டுப் பழக்கவழக்கங்களில் சிக்கியிருக்கும் ஒருசில நமது புதிய விசுவாசிகள் அவைகளிலிருந்து முற்றிலுமாய் விடுபட்டு, கிறிஸ்தேசுவில் உறுதியாக வளர; ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் மற்றும் பல்வேறு பாவச்செயல்களில் ஈடுபட்டு வரும் பரேலா இனமக்கள் கிறிஸ்துவண்டை வந்து சேர ஜெபிப்போம்.

# 11 நவம்பர்
## வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கந்திகுப்ப இஸ்ரேல்
திருமதி. பிரேம்லதா சுரேஷ் மால்தோ
திருமதி. ஜாய் பெல்லா இவாஞ்சலின் சுனில்
செல்வி. ஏஞ்சல் ராஜ் R.V.

## நிவாலி:
### சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 4 கிராமங்களில் முதல்முறையாக வெளிப்புற சந்திப்பு ஊழியமும், 2 இடங்களில் சத்சங் கூடுகையும் நடைபெற்றுள்ளன. புதிதாக பெண்கள் ஜெபக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜாக்கூர் பகுதியில் புதியதொரு ஆராதனைக்குழு தொடங்கப்பட்டுள்ளது. சட்டாலி கிராமத்தில் முக்கிய தலைவர்களுக்கான பயிற்சி முகாமொன்று நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக துவங்கப்பட்டுள்ள நமது ஆராதனைக்குழுவை தொந்தரவு செய்யும் உள்ளூர் போதகரொருவர் மனம் மாற; கோலியாபானி மற்றும் கெலி பகுதிகளில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய; பொக்கரதா மற்றும் பட்டி பகுதிகளில் மறுஆய்வு வெற்றிகரமாக நடத்தப்பட; இப்பணித்தளத்தில் ஆவிக்குரிய எழுச்சி பெரிதளவில் உருவாக; சட்டாலி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கான நிலமொன்று கிடைக்க ஜெபிப்போம்.

# பீஹார்
## அரரியா:
### ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 6 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். புதிதாக 2 ஆராதனைக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. 2 கிராமங்களில் 600 பேர் காணும்விதமாக இயேசுத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. மனநோயிலிருந்து சுமந்தரா தேவி சுகம் பெற்று, நமது விசுவாச மந்தையில் வந்து இணைந்துள்ளார். வினோத் ரிஷிதேவி வயிற்று வீக்கத்திலிருந்தும், ஜித்தினிதேவி பெண்ணியப் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்குள்ள பிள்ளைகள் கல்விப்பயில தகுந்த மிஷன் பள்ளிகள் தொடங்கப்பட; நடந்துக்கொண்டிருந்த ஒரு கலவரத்தில் சமாதானம் பண்ணச் சென்று அக்கலவரத்தில் காயப்பட்டதோடு, எதிர்குழுவினரால் காவல்துறையிடம் பொய் தகவலைக் கொடுக்கும்படி அச்சுறுத்தவும்படுகின்ற ரமேஷ் ரிஷிதேவிக்காக; பழைய வழிபாட்டுக்காரியங்களைச் செய்யும்படி தீய ஆவியினால் தூண்டிவிடப்பட்டிருக்கிற கனிதா குமாரி அத்தீய ஆவியிடமிருந்து விடுபட; கிறிஸ்துவை அறியாதபடி குடிப்பழக்கத்தின் மிகுதியினால் மஞ்சள் காமாலை நோயினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நமது விசுவாசி சுகந்தா தேவியின் கணவர் சுகம் பெறவும், கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும்; நீரஜ் குமார் மற்றும் கோக்கியா தேவி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

12
நவம்பர்
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. சங்கர் P.

# ஜார்க்கண்ட்

## பர்ஹர்வா:

### கிரிஷான் குமார் & சாந்திலால்

**துதிக்க:** சுனில் ரவிதாஸ், லுக்னிதேவி, அர்ஜுன் குமார், சோனியா ஆகியோர் புதிதாக நமது ஆலய ஆராதனையில் வந்து கலந்துகொள்கின்றனர். பல கிராமங்களில் 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகைகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. அந்த உபவாச ஜெபக்கூடுகைகளின்போது புதிதாக 7 பேர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளனர். இரவுநேர ஜெபக் கூடுகைகள், வீடு சந்திப்புகள், ஞாயிறுப்பள்ளி நிகழ்ச்சிகள், பெண்கள் கூடுகைகள், தன்னார்வ ஊழியர் பயிற்சிக்கூடுகைகள், சபை மூப்பர்கள் பயிற்சிக்கூடுகைகள் மற்றும் வெள்ளிக்கிழமைதோறும் நடை பெறும் பெண்களுக்கான உபவாச ஜெபக் கூடுகைகள் யாவும் பல்வேறு கிராமங்களில் முறையாக நடத்தப்பட்டுள்ளன. பல்லவ் குப்தா தைராய்டு பிரச்சனையிலிருந்தும், சோனி மற்றும் சூரஜ் பெண்ணியப் பிரச்சனையிலிருந்தும் முழுசுகமடைந் துள்ளனர். பாம்புக்கடியிலிருந்து நமது விசுவாசிகள் பலரை தேவன் காப்பாற்றி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பட்டுதாஜ்கீல் கிராம தேபந்திதேவி வாதநோய்ப்பிரச்சனையிலிருந்தும், ரத்தினி தேவி நோய்கிருமிப்பிரச்சனையிலிருந்தும், பட்டாசிதேவி பக்கவாதநோய்ப் பிரச்சனை யிலிருந்தும், தலாசிமியா கிராம ஸ்ரீராம் மற்றும் முகுல் சாகா தண்டுவட நரம்புப் பிரச்சனையிலிருந்தும் முழுமையான சுகம் பெற; ஆபிரகாம் ரவிதாஸின் குடும்பம் தங்களின் நிலப்பிரச்சனையிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## லால்மட்டியா:

### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** ராம்கோல் பகுதியில் சபைச் செயல்பாடுகளிலும், சுவிசேஷப்பணியிலும் நமது விசுவாசிகள் நன்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். மேலும் நமது விசுவாசிகளில் சிலர் அங்குள்ள உள்ளூர் சந்தைக்குச் சென்று பிறருக்காக ஜெபித்தும் வருகின்றனர். நமது ஊழியச்செயல்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த தால்தகலி கிராம மக்கள் தற்போது நன்கு அமைதி காத்து வருகின்றனர். பெண்ணியப்பிரச்சனையினால் பாதிக்கப்பட்டு அதிக பெலவீனத்திற்குட்பட்டிருந்த ஷிவாணி பூரண சுகமடைந்துள்ளார். சிம்ப்தா, ஹிஜ்ரி மற்றும் கோரடி கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டு கின்றனர். வாய்ப்புற்றுநோயினால் கஷ்டப் பட்டுவந்த இசுன்சோரேனுக்கு ஜெபத்தின் மூலம் அப்புற்றுநோய்ப்புண்களிலிருந்து புழுக்கள் வெளியேறவும், அவருக்கு தகுந்த சிகிச்சையுதவிகள் அரசாங்க மருத்துவமனையிலிருந்து கிடைக்கவும் தேவன் காண்பித்து வருகிற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபிறகும் தங்களது சமுதாயத்தினருக்குப் பயந்து கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் மக்களுக்காக; புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் தங்களது பணியிடங்களில் கர்த்தருக்குகந்த சாட்சிகளாய் உறுதியாக நிலைத்து நிற்க; தால்தகலி கிராம தலா பஸ்கிக்கு சீரான மனபலம் கிடைக்க; கோரடி கிராம அங்கித் டுடு பக்கவாதநோயிலிருந்தும், சுட்டிராய் டுடு கால்வீக்கத்திலிருந்தும், ஹாட்பந்தா கிராம ஜோகன் மெஹ்தா வாய்ப்பேச மற்றும் நடக்க இயலாமை பெலவீனத்திலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 13 நவம்பர்
ஞாயிறு

### பதரியா:
### அகஸ்டின் பிஜி & மன்னா ராஜ வித்யா

**துதிக்க:** சிறுவர் பராமரிப்பு மையப்பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 கிராமத்து பிள்ளைகளும், நமது திருச்சபைகளைச் சார்ந்த பிள்ளைகளும் மற்றும் இப்பணித்தளப் பிள்ளைகளும் பயன்பெற வாய்ப்புள்ளது. குடியா கிராம சப்னம் தனது 10-ம் வகுப்பு அரசாங்கத்தேர்வில் 500-க்கு 470 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். வலிப்பு நோயினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த 12-ம் வகுப்புப் படிக்கும் திலீப் மால்தோ தேவகிருபையால் நன்கு சுகம் பெற்றுள்ளார். கிரி சாந்தி மால்தோ நெஞ்சுசளிப் பிரச்சனையிலிருந்தும், பெஞ்சமின் பக்கவாதநோய்ப் பாதிப்பி லிருந்தும் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்களும் சபைக் கமிட்டி அங்கத்தினர்களும், நமது விசுவாசிகளையும் அவர்களது குடும்பத் தினரையும் ஆவிக்குரிய வழியில் நடத்த; தண்ணீர் பற்றாக்குறையினால் பாதியில் நிற்கும் சாத்பேடா ஆலயக்கட்டுமானப் பணி சீக்கிரத்தில் நிறைவுப்பெற; பிடுச்சப்பிடி, பிடு கெர்லாக், லோகதம்பா, சிம்பி, அகோயா, கபிடி, பெருகொடா ஆகிய இடங்களிலுள்ள நமது பின்மாற்ற மடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்து கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ; சுவிசேஷத்தை எதிர்க்கும் மய்சா பகடியா, ரமா பகடியா, சோமியா பகடியா, கங்காராம் பகடியா, அஞ்சுரு பகடியா மற்றும் சர்கு பகடியா ஆகியோர் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### லிட்டிபாடா: எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 31 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். பல்வேறு காரணங்களை முன்னிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜெபக் குழுக்களில் சில ஜெபக்குழுக்கள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. பஞ்சாயத்துத்தலைவரான ரஸ்கா ஹெம்ரோம் தனது குடும்பத்துடன் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய ஆயத்தமாக உள்ளார். பலருடைய ஜெபத்தினால் நமது சுதேச ஊழியரான பவுலோஸ் மராண்டியின் மகள் பவுலினா வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். நமது ரோன்பாய்குட் கிராம விசுவாசிகள் தங்களுக்கென தற்காலிக ஆலயமொன்றை தாங்க ளாகவே அமைத்து, அதைப் பிரதிஷ்டை செய்து, அதில் தேவனை ஆராதித்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபைகளில் நடத்தத் தீர்மானித் துள்ள ஊழியநிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி நடைபெற; எவ்வித பிரச்சனையுமின்றி பதரியா ஆலயக்கட்டு மானப்பணி துரிதமாகக் கட்டிமுடிக்கப்பட; கிறிஸ்துவின் மந்தையில் இணைய ஆயத்தமாயிருப்போர் யாவரும் இரட்சிப்பின் அனுபவத்துடன் தங்களது வாழ்வில் தேவ சமாதானத்தை அனுபவிக்க ஜெபிப்போம்.

**14 நவம்பர்**

**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரஞ்சித் ஜேம்ஸ், திரு. ஜாண் C.H.
திருமதி. ஜெலின் சங்கர், திரு. வால்வி தீனா தானா
செல்வி. மகேஷ்வரி ரெபேக்கா

# மேற்கு வங்காளம்

## பாலூர்காட்: ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** சுவிசேஷம் 335 பேருக்கு முதல் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 36 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. 4 புதிய நபர்கள் விசுவாசிகளாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 4 வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளும், ஒரு சுதேச ஊழியர் பயிற்சி நிகழ்ச்சியும், ஒரு முதியோர் கல்வி பாடத்திட்ட நிகழ்ச்சியும், 2 பெண்கள் முகாம்களும், 2 தேடுவோர் முகாம்களும் மற்றும் உபவாச ஜெபக்கூடுகைகளும் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. பெண்ணியப் பிரச்சனையிலிருந்து சிப்லா முர்முவும், முடக்குவாதப் பிரச்சனையிலிருந்து மனாசி பஸ்கியும் அற்புத சுகமடைந்துள்ளனர். ஹரிபூரில் ஆலயம் கட்ட நல்லதொரு இடம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்களும், விசுவாசிகளும் உற்சாகமாக ஊழியங்களில் ஈடுபட; தன்பூர் கிராம புனுல்சோரேன், ராசிடோலா கிராம ஃபேஸ் மராண்டியின் குடும்பம், டங்கா கிராம சேட்லைட் சோரேன், லக்கிடோலா கிராம ராகுல், உதல் கிராம பிப்பிங், கட்டாங் கிராம ரபிஸ் மற்றும் பஸ்னாய் கிராம மத்லா இரட்சிப்படைய; ஹரிபூரில் ஆலயம் கட்ட விரைவில் அனுமதி கிடைக்க; தீய ஆவியின் பிடியில் சிக்கித்தவிக்கும் பன்பாசா விடுதலை பெற; முசக் ஹஸ்தா மனநிலை பாதிப்பிலிருந்தும், தாசுல் கிராம பிஸ்வநாத் காசநோய்ப் பிரச்சனையிலிருந்தும் சுகமடைய; வங்காளதேச எல்லைக்கருகில் அமைந்திருக்கும் சல்காட்சி என்ற இடத்தில் நடத்தவிருக்கும் சிறப்பு கூடுகையொன்று எவ்வித எதிர்ப்புமின்றி நடந்து முடிய ஜெபிப்போம்.

## சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** சுவிசேஷம் 4 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2 புதிய நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். ஜித்தல்பூரில் ஒரு புதிய திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளது. 2 முழுஇரவு ஜெபக்கூடுகைகளும், வாரந்தோறும் நடைபெறும் 8 உபவாச ஜெபக்கூடுகைகளும் மற்றும் 18 இரவுநேர ஜெபக்கூடுகைகளும் கிறிஸ்துவை அறியாதோர் மத்தியில் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ரிஷி இனமக்கள் மத்தியில் சில புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். வாலிபர்களுக்கு வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. தன்னார்வமாக நமது ஊழியங்களில் வந்து உதவி செய்யும் ஜெத்தாவின் குடும்பத்தாருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கும் தங்களது குடும்பத்தினரை துன்புறுத்தும் பர்கா மராண்டி, துளசி மராண்டி மற்றும் மொஸ்தவ் மராண்டி மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; பஜித்பூர் என்ற புதிய பகுதிக்குச் சென்றிருக்கும் நமது சுதேச ஊழியர் கோப்னா முர்முவின் குடும்பம் அங்கே நமது ஊழியத்தைத் தொடங்கி, அநேக ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டுவர; புதிய கிராமங்களான கோலாமூர், பெட்காசா, கிஜூரியா, சோலாகர், துர்காபித்தா, குரியல், கொடகொச்சா, பூசுல் மற்றும் சின்சா குட்டுவில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; ஆலயம் கட்டுவதற்கான நிலத்தை வாங்க வாக்குக்கொடுத்திருக்கும் நமது வாரி சபை மூப்பர், தான் கொடுத்திருக்கும் வாக்கை நிறைவேற்ற ஜெபிப்போம்.

**15 நவம்பர்**

**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் பிசோயி

திருமதி. வசாவா சவிதாபேன் பச்சியாபாய்

## தபன்: R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்; ரஞ்சன் கஸ்லா, சதீஷ் குமார்

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியம் 10 கிராமங்களில் நடைபெற்றுள்ளன. 2 புதிய ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 5 இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 2 பெரியளவு வெளிப்புற சந்திப்பு ஊழியநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்தேறியுள்ளன. இங்கே நடைபெற்ற இயேசுத்திரைப்பட நிகழ்ச்சி மூலம் 800 பேர் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். கலிபதார் கிராம பொர்மேஷ் ஹஸ்தக் மனநோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். பிஸ்வநாத் ஹெம்ரோம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு, அநேகருக்கு நல்லதொரு சாட்சியாக வாழ்ந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவைக்குறித்தும், அவரது வாழ்வைக்குறித்தும் அறிய ஆவலோடிருக்கும் தகர்நாகி, கடிடோலா, திக்திஹி, கலிடோலா மற்றும் மாலிகவ் கிராம மக்கள் யாவரும் சுவிசேஷத்தைக் கேட்பதோடு நின்றுவிடாமல், கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஆலயத்திற்கு வராமல் பின் மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவின் அன்பிற்குள் வர; திபு சோரேனும், சுகி ஹெம்ரோமும் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தப்பிப் பிழைக்க; பிடியா ஹஸ்தக் பக்கவாதத்திலிருந்தும், சமி சோரேன் கால்களிலுள்ள நரம்புப்பிரச்சனையிலிருந்தும், மய்கு டுடு 4 மாதங்களாக இருக்கும் கால் புண்களிலிருந்தும் பூரண சுகம் பெற; சியால்கன்ஜ், லோவா டோலா, ஷிக்கர்தங்கா, மிர்ஜாபூர் மற்றும் ஜினாய்கொன்டி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் கிடைக்கவும், அங்கே ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

## இட்டாஹாா்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** சுவிசேஷம் 10 கிராமங்களில் முதல்முறையாகப் பகரப்பட்டுள்ளது. 18 விசுவாசிகள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 3 இரவுநேர ஜெபக்கூடுகைகள் சிறந்த முறையில் நடந்தேறியுள்ளன. கடந்த 6 வருடங்களாக பெண்ணியப்பிரச்சனையினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த சோனா சோரேனுக்கு நல்ல முறையில் அதற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகப் பொறுப்பெடுத்திருக்கும் சிறிய ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் சபை மூப்பர்கள் கிறிஸ்துவில் திடமாக வளரவும், நமது விசுவாசிகளை அவர்கள் சீராக ஜெபத்திலே வழிநடத்தவும்; கோப்பா நகர், முஷிதாப், கக்லா, மங்தா, பரபிகா, கம்லாய், புகுரிகுட்டு, வெலியாமுனி, சாட்னிகுட்டு, சௌதிகுட்டு, உல்குட்டு, தீப் நகர் ஆகிய இடங்களிலுள்ள ஆராதனைக்குழுக்கள் திருச்சபைகளாக மாற; நமது சுதேச ஊழியரான சுஜான் ஹெம்ரோமின் மனைவி ஹீராமுனி மர்திக்கு ஏற்பட்டுள்ள கர்ப்பப்பைப் பிரச்சனையிலிருந்து அறுவை சிகிச்சையின்றி சுகமும், குழந்தை பாக்கியமும் கிடைக்க; பெஞ்சமின் ஹெம்ரோமின் குடும்பத்தினர் மழலை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; புகுரிகுட்டு ஆலயக்கட்டுமானப்பணி அதற்கென தீர்மானிக்கப்பட்ட தொகையில் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

**16**
**நவம்பர்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆபிரகாம் தாமஸ்

# சத்தீஸ்கட்

## பாண்டே:

### பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** புதிதாக 31 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புதிதாக 7 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 3 நாட்கள் வெளிப்புற சந்திப்பு ஊழியம் துர்கொண்டல் மற்றும் அந்தகார் பகுதிகளில் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. 18 வேதாகம வகுப்புகள், 58 வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தம்ஜீ மற்றும் ராஜு தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருப்போர் அவரில் ஆழமாய் வளர; கரண் திர்கிக்கு காது நன்கு கேட்க; புடியாலு லக்ரா மலேரியா மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், தசரிபாய் அதிகப்பட்ச நீரிழிவு நோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## சம்ப்பா:

### வினோத்குமார் சிங் & பிரவதிமணி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜீத்தன் தடுன் தீய ஆவியின் பிடியிலிருந்தும், குடிப்பழக்கத்தி லிருந்தும் விடுதலை பெற்றுள்ளார். ஒரியகான் கிராமத்தில் முதல்முறையாக 12 மணிநேர ஜெபம் நடத்தப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் நமது விசுவாசிகளின் மூலம் அவர்களது உறவினர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 10 வருடங்களாக அவதிப்பட்டு வந்த பிசாசின் கட்டிலிருந்து ரத்தினிபோஸ்லி விடுவிக்கப்பட்டுள்ளார். 3 மாதத்திற்குள்ளாக நமது பெண் விசுவாசிகள் ஒவ்வொருவரும் 5 புதிய பெண்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்த வேண்டும் என்ற தீர்மானத்தில் சில பெண் விசுவாசிகள் ஜெபத்துடன் அதை நேர்த்தியாகச் செய்து முடித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முல்முலா மற்றும் சிவிரி நாராயண் பகுதிகளில் 2 துணை மையங்கள் துவங்கப்பட எடுத்திருக்கும் திட்டம் செயல்படுத்தப்பட; ஜகீஷ்வர் மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், அருண் பஞ்சாரி மூக்கடைப்பு பிரச்சனை யிலிருந்தும், பிரிஜ்பாய் தைராய்டு பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற; இந்துரூஸின் குடும்பத்தில் குழந்தை பாக்கியம் அருளப்பட ஜெபிப்போம்.

## கூடுதல் பெற்றவர்கள் கூடி வந்தனர்!

*மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். சிடியாமால் கிராம ஹீராலால். இவர் மகாராஷ்டிராவில் தினக்கூலி வேலை செய்து வந்தார். ஒருமுறை தன்னுடன் வேலை செய்வோருக்கு மாதச்சம்பளத்தை பங்கிட்டுக் கொடுக்க இவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். கடைசியில் பணத்தை கணக்கு பார்த்த போதுதான், இவர் ஒருசில தொழிலாளர்களுக்கு தன்னையுமறியாமல் பேசிய சம்பளத்திற்கு மேல் கூடுதலாக பணம் கொடுத்துவிட்டது தெரியவந்தது. யார் யாருக்கு கூடுதல் கொடுத்தார் என்ற விபரமும் இவரிடமில்லை. செய்வதறியாது திகைத்தார். தன் மனைவியுடன் சேர்ந்து அன்றிரவு இதற்காக ஜெபம் செய்தார். பின்பு காலையில் எழுந்தபோது, இவரது வீட்டின் முன் கூடுதலாகப் பணம் பெற்ற அனைத்து தொழிலாளர்களும் கூடி வந்து, அப்பணத்தை இவரிடம் திருப்பிக் கொடுத்தனர். ஹீராலால் மீது விழயிருந்த பணபாரம் நீங்கிப்போனது. கர்த்தருக்கே மகிமை!*

## 17 நவம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹேமலதா ஆபிரகாம்

# ஒடிசா

## கியோன்ஜர்கட்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** இப்பகுதியிலுள்ள கிராமங்களில் 30 இரவுநேர ஜெபக்கூடுகைகள் நடத்தப் பட்டுள்ளன. 16 கிராமங்களில் நடத்தப்பட்ட கூடுகைகளின் மூலம் 987 பேர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். 17 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மமலபோஷி சபையைச் சார்ந்த ஜனோ முண்டாவும், திம்ரியா கிராமத்தைச் சார்ந்த நமிதா பூர்த்தியும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஜெபத்தின் மூலம் 3 வயது சிறுவனான காந்தே பூர்த்தி இரத்த வாந்தி பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றுள்ளான். பல்லகாரா விடுதியைச் சார்ந்த ஆதி முண்டாவிற்கு இடுப்பெலும்பு ஜவ்வு பிசகல் பிரச்சனையிலிருந்து ஜெபத்தின் வாயிலாக தேவன் தந்துள்ள சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சந்து முண்டா, உமா முண்டா, பப்லு முண்டா, சாபித்ரி முண்டா, திகி முண்டா மேலும் பலர் மனந் திரும்ப; படாதேவ்தா மற்றும் சகாதார் ஆகிய இடங்களில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட; பங்கர்சுனி மற்றும் மமலபோஷி ஆலயங்களில் நடைபெற்றுவரும் சிமெண்ட் தளப்பணிகளுக்காக; இப்பணித்தளத் திற்கு நல்லதொரு சுதேச ஊழியர் கிடைக்க; நமது சுதேச ஊழியர்களின் குடும்பங்கள் ஊழியங்களில் உற்சாகமாக ஈடுபட; பிறவியிலிருந்தே காது கேட்க இயலாமலும், வாய்ப்பேச முடியாமலும் இருந்து வருகிற சுப்பாய் முண்டா அற்புத சுகம் பெற; கல்லீரல் மற்றும் சிறுநீரகப்பிரச்சனைகளினால் அவதிப்படும் நமது விசுவாசிகளுக்கு பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜஷிப்பூர்:
### சுகின்லால் & ஜெயராணி; ஆபிரகாம், அரவிந்த் குமார்

**துதிக்க:** புதிதாக 21 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். சிறகுட்டு கிராமத்திலுள்ள மய்னா சோரேன் மூளை மலேரியா காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றதினால், அவரது குடும்பத்தைச் சார்ந்த 10 நபர்கள் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். உயர்நிலைப்பள்ளியில் நமது விடுதிப் பிள்ளைகளுக்கு கல்விப்பயில இடம் கிடைத்துள்ளது. நமது விடுதிப்பிள்ளை களுக்காக ஒருநாள் ஆவிக்குரிய சிறப்புக் கூடுகையொன்று நடத்தப்பட்டுள்ளது. தேவ கிருபையாலும் துணைக்கல்வி ஆசிரியரின் உதவியாலும் நமது விடுதிப்பிள்ளைகள் யாவரும் தங்களது கல்வி நிலையில் நல்ல முறையில் முன்னேறி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக 3 கிராமங்களில் நடைபெறவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நல்ல ஆவிக்குரிய பலனை நல்க; கர்த்தரின் மந்தைக்குள் புதிதாக இணைந்துள்ள 21 நபர்களும் கிறிஸ்துவின் சாயலில் வளர்ந்திட; நமது திருச்சபையினரைப் பகைக்கும் பாதிஜோரி கிராம மக்கள் இயேசுவின் அன்பால் தொடப்பட; ஹோ இனமக்கள் மத்தி யில் ஆவிக்குரிய அசைவு உண்டாக; நமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச்செல்ல ஏற்றதொரு 4 சக்கர வாகனம் கிடைக்க; இக்குளிர்காலத்தில் ஏற்படும் பெலவீனங்களுக்கு நமது விடுதிப்பிள்ளைகள் முற்றிலும் விலக்கிக் காக்கப்பட ஜெபிப்போம்.

**18**
**நவம்பர்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜாக்குலீன் பெஞ்சமின்
திரு. த்சாங்சே சங்தம்
திரு. ஸ்டான்லி P.

## டேங்கானல்:

### சந்து மராண்டி, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்களில் இருக்கும் 314 பேருக்கு சுவிசேஷம் முதல் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அநேக மாதங்களாக குடற்புண் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுவந்த பிஸ்னு டிகல் மற்றும் குருபாரி பூபாங்கா பூரண சுகமடைந் துள்ளனர். பல கிராமங்களில் சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. 5 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் வருகிற நாட்களில் அநேக புதிய மக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப் படும் விதமாக நடைபெற்றுள்ளன. 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். பசாய்பட்டு திருச் சபையில் புதிதாக சபை கமிட்டியும், சபை மூப்பர் குழுவும் உருவாக்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சொந்த கிராமத்தில் குடிநீருக்கு தடைசெய்யப்பட்டிருக்கிற பிரச்சனையில் ஹரிதபாடா மற்றும் குட்டுசாகி கிராமங்களிலுள்ள நமது புதிய விசுவாசிகளுக்கு நல்ல தீர்வு கிடைக்க; பக்கவாதத்திலிருந்து மகந்தி குன்கல் சுகம் பெற; பிறவியிலிருந்தே நடக்கமுடியாமல் படுக்கையிலிருக்கும் உடன்பிறந்தவர்களான சில்கி சோரேனும், ஸ்ரீமதி சோரேனும் விரைவில் அற்புத சுகமடைய; வரும்நாட்களில் நடக்க விருக்கும் விசுவாசிகள் முகாம், கிராம சபை கமிட்டி கூடுகை, வீடு சந்திப்பு, ஆத்தும ஆதாய பயிற்சிக்கூடுகை மற்றும் இதர ஊழிய நிகழ்ச்சிகள் எவ்வித தடையுமின்றி நடைபெற ஜெபிப்போம்.

## ராய்ரங்பூர்:

### சாமுவேல் J. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** சன்னமாரா ஆலயக்கட்டு மானப்பணி நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. பல்வேறு கிராமங்களி லிருந்து 6 குடும்பங்கள் நமது ஆலய ஆராதனையில் புதிதாக வந்து பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். காசநோயினால் படுத்தப்படுக்கையாகிக் கிடந்த லிபா கிஷு ஜெபத்தின் வாயிலாக தற்போது மிதிவண்டி ஓட்டுமளவிற்கு ஒரே வாரத்தில் அற்புத சுகம் பெற்றுள்ளார். 5 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நந்து நாயக்கின் மகன் தனக்குக் கிடைத்த சுவிசேஷப்பிரதிகளை தனது முழு கிராமத்தினருக்கும் விநியோகித்ததின் மூலம், மங்குவின் குடும்பம் நமது லக்ஷ்மிபோஷி ஆலய ஆராதனையில் புதிதாக வந்து கலந்துகொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்க வுள்ள 2 சிறியளவு தலைவர்கள் பயிற்சிக்கூடுகைகள், 3 புதிய விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகைகள், 2 இயேசுத்திரைப்பட நிகழ்ச்சிகள், 2 முக்கிய தலைவர்கள் பயிற்சிக்கூடுகைகள் மற்றும் 2 சபை மூப்பர்களுக்கான பயிற்சிக் கூடுகைகள் யாவும் ஆசீர்வாதமான முறையில் நடைபெற; மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ள காசிராம் முண்டாவிற்கு சுகம் கிடைக்கவும், அதன்மூலம் அவருடைய குடும்பம் முழுவதும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**19 நவம்பர்**

**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் சொர்ணா துரைராஜ்
திருமதி. பசந்தி பாசுதேவ் மால்தோ

**ரிமுலி: சங்கர் P. & ஜெலின்**

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. ஜெபத்தின் மூலமாக கல்பனாவின் பச்சிளங்குழந்தை மூச்சுத்திணறல் பிரச்சனையிலிருந்து ஓரளவு சுகம் பெற்று வருகின்றது. மான்சிங், ஜெகன், மங்கல், பிஸ்னு ஆகியோர் தன்னார்வமாக சுவிசேஷத்தைப் பறைசாற்றி வருகின்றனர். முதியோர் கல்வித்திட்டத்தில் ஆர்வம் காட்டும் லக்ஷ்மி மற்றும் புதுனி தங்கள் கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்கு வந்து அக்கல்வித்திட்ட வகுப்புகளில் கிரமமாகப் பங்கேற்கின்றனர். இக்கல்வித்திட்டத்தின் மூலம் 4 பேர் நன்கு வாசிக்கவும், எழுதவும் கற்றுத்தேர்ந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஏற்கனவே திட்டமிட்டுள்ளப்படி சுவிசேஷத்தினால் 30 கிராமங்களைச் சந்திக்கவும், 5 கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கவும் தேவன் கிருபை புரிய; கல்பனாவின் 2-வது குழந்தைக்கு இருக்கும் நுரையீரல் பிரச்சனை முழுவதுமாக அகல; அர்சலா மற்றும் துளசியின் குடும்பத்தில் காணப்படும் தீய சக்தி ஒன்றுமில்லாமல் போகவும், அக்குடும்பப் பிள்ளைகள் யாவரும் இரட்சகரை அறிந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

# குஜராத்

## ஜாலோத்:

**குமார் பால் & அமுதா**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தீய ஆவியின் தொந்தரவினால் ஏற்பட்ட 4 முறை கருசிதைவிற்குப் பின், தற்போது கோகிலா 5-வது முறையாக குழந்தைப்பேறு பெறும் பாக்கியம் அடைந்துள்ளார். விஷப்பாம்பு கடியினால் உண்டான காயத்திலிருந்து மாலாபாய் சுகம் பெற்றுள்ளார். உண்ண இயலாமல் கஷ்டப்பட்டு வந்த கது பாயின் எருது நமது மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகளுடைய ஜெபத்திற்குப்பின் நன்கு குணமாகியுள்ளது. ஜங்குபேனின் கண்களில் சிறிய பிளாஸ்டிக் துகள்கள் விழுந்தபோதிலும், அவர் கண்பார்வையை இழந்து போகாதபடி தேவன் காத்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பினிமித்தம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லக்கன்பூர் ஆலயக்கட்டுமானப்பணி தைரியமாக நமது விசுவாசிகளால் மீண்டும் தொடங்கப்படவும், அதற்கு கிராம பஞ்சாயத்து தலைவரின் கண்களில் தயவு கிடைக்கவும்; அநேகரை கடனாளிகளாக்கும் பீல் இனமக்களுடைய வரதட்சணை பழக்கம் மறைய; கோட்டியா கிராமத்திற்கு மின்சார வசதி கிடைக்க; வால்சிங்பாய் பக்கவாதத்திலிருந்தும், 5 வயது ரட்சிபேன் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் சுகமடைய; ரமேஷ்பாய் மற்றும் தெர்சிங்பாய் குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

**20 நவம்பர்**
**ஞாயிறு**

### உமர்காம்:

**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புதிய நபரொருவர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர்ந்துள்ளார். 12 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. அட்டு கிராமத்தில் நடந்த சுகமளிக்கும் ஆராதனையில் அநேகர் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது 4 வயது குழந்தையை இழக்கக்கொடுத்திருக்கும் சஞ்ஜய்பாய் மற்றும் லலிதாபேனிற்கு தேவன் நல்ல மனஆறுதல் நல்க; போர்பந்தருக்குச் சென்று மீன்பிடித்தொழில் செய்து விட்டு, 6 மாதங்கள் கழித்து வீடு திரும்பவுள்ள நமது விசுவாசிகளை இந்த மழைக்காலங்களில் உண்டாகும் வெள்ளப்பெருக்கிலிருந்து தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

### ஆரவல்லி பிராந்தியம்:

**ஐசக் ராஜா & மேக்தலின் கிரேஸ்**

**துதிக்க:** புதிதாக 40 நபர்கள் இயேசுவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். ஒரு ஆத்தும ஆதாய முகாமும், 10 கிராமங்களில் புதிதாக சுவிசேஷமும் அறிவிக்கப்பட்டுள்ளது. தாமேதா மற்றும் அம்பத்லாவ் கிராமங்களில் புதிதாக துணைக்கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தபாய்சா திருச்சபையின் 7-வது ஆண்டு நிறைவு விழாவில் அத்திருச்சபை உருவாகப் பெரிதும் பாடுபட்டு உழைத்த நமது முன்னோடி ஊழியர்களும், சுதேச ஊழியர்களும் பங்கேற்கும் அழகிய வாய்ப்பு பெற்றனர். ஃபுடிடா கிராமத்தில் வாழும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் புதியதொரு திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தினிமித்தம் அச்சுறுத்தலுக்குள்ளாகும் உம்ரல்லா தாலுகாவைச் சார்ந்த ஹித்தேஷ்பாய், ராகுல்பாய், மகேந்திரபாய் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; சூரஜின் மனைவி விரைவில் வீடு திரும்பி, கணவருடன் சமாதானமாய் வாழ; மொடாசா பகுதியில் புதியதொரு திருச்சபை உருவாக்கப்பட ஜெபிப்போம்.

## தேவகரம் திறந்து வைத்த ஜீவவாசல்!

*ஜார்க்கண்ட், தீன்பஹாட் பணித்தளம். புல்ஜுரி கிராமத்தில் சுவிசேஷ கூட்டமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, திடீரென ஒரு கூட்ட உயர்ஜாதி இனத்தினர் வந்து அக்கூட்டத்தை தடை செய்தனர். அச்சுவிசேஷ கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 18 வருடங்களாக பிசாசின் பிடியிலிருந்து இயேசுவின் நாமத்தினால் மீட்கப்பட்ட மாக்னியும் ஒருவர். இவர் எதிர்ப்பு தெரிவித்தோரிடம் துணிச்சலுடன் தனது சாட்சியைப் பகர்ந்தார். என்னாயிற்று? அக்கூட்டத்தார் வாயடைத்துப்போய், அவ்விடத்தை விட்டு அமைதியாக நகர்ந்தனர். கடந்த ஜுலை மாதத்தில் மாக்னியின் கணவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். இதையெல்லாம் உடனிருந்து கவனித்த கீதா என்ற மற்றொரு பெண்மணியும் இப்போது சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றார். எனவே, இக்கிராமத்தில் ஓர் ஆராதனைக்குழு தொடங்க தேவன் திறந்தவாசலைத் தந்துள்ளார். அல்லேலூயா!*

**21 நவம்பர்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பரிமளம் ஐசாயா
திருமதி. ஜெஹாலின் ஜெமி ஜெயசேகர்
திருமதி. மன்பிரீத் கௌர் அய்யனார்

## ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

**ஹரிபாபு & பங்கஜம்; பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா; சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி; பிஜூலால் & ஸ்டெஃபி; டேனியல் ராஜாமணி & சோஃபியா; ரூத், மய்னா, காயத்ரி, ஏஞ்சல்ராஜ் மற்றும் ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ்**

**துதிக்க:** தேசிய மிஷனெரிப்பயிற்சி மையத்தில் தனது மிஷனெரிப்பயிற்சியை நிறைவு செய்து, தற்போது நமது ஜாவ்டா பள்ளியில் மிஷனெரி ஆசிரியராக சகோ. ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ் புதிதாக வந்து இணைந்துள்ளார். தனது வயது பெலவீனங்களின் மத்தியிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் திருமதி. பெரில் யோகராஜ் அவர்கள் நமது பள்ளிப்பிள்ளைகளுக்கு கல்வி சம்பந்தமாகவும், ஆவிக்குரிய விதமாகவும் மற்றும் அங்கு பணிப்புரியும் ஊழியர்களுக்கும் பயிற்சி வகுப்புகளை நேர்த்தியாக நடத்தி பெரும் உதவி செய்துவருகிறார்கள். செப்.16&19-ம் தேதிகளில் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அந்நிகழ்ச்சியில் அரசாங்க அதிகாரிகள் ஒரு சிலர் கலந்துகொண்டு, விளையாட்டில் பங்கேற்ற மாணவர்களை உற்சாகப்படுத்தியுள்ளனர். மருத்துவ முகாம்களும் பிள்ளைகளுக்கு முறையே நடத்தப்பட்டு வருகின்றன. நமது மிஷனெரி ஆசிரியர்கள், உள்ளூர் ஊழியர்கள் மற்றும் பள்ளிப்பிள்ளைகள் யாவரும் இம்மட்டும் சுகநலத்துடன் காணப்படுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 6,7,8 மற்றும் 10-ம் வகுப்பு அறிவியல் ஆசிரியையான சகோ. காயத்ரியின் திருமணத்தை முன்னிட்டு அவருக்கு தற்போது பணியாற்ற இயலாததால், அப்பணியிடத்தில் வேறுரொருவர் விரைவில் பணியமர்த்தப்பட; குஜராத் அரசு எதிர்பார்ப்பின்படி இப்பள்ளியில் பணியாற்ற அர்ப்பணிப்பு மிகுந்த B.Ed., பட்டதாரிகள் கிடைக்க; கடந்த சில வருடங்களாக கணிசமாக குறைந்துவரும் மாணவர் சேர்க்கை வருகிற வருடங்களில் அதிகமாக; நமது பள்ளிப்பிள்ளைகளின் உடல் நலம் மற்றும் கல்வி நிலையில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் காண ஜெபிப்போம்.

## *வல்ல இயேசுவின் நாமம் நல்ல கேடகம்!*

*மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். கனப்பூர் கிராம ரேகா காய்ச்சல் மற்றும் சரீரம் முழுவதும் புண்களினால் வாதிக்கப்பட்டிருந்தார். அவருடைய பெலவீனத்தினிமித்தம் அவரால் அவரது தினக்கூலி வேலைக்குச் செல்ல இயலவில்லை. இந்நிலையில் ஒருநாள் அவரது வீட்டிற்குள் பாம்பு நுழைந்து ஒரு கோழியைப் பிடித்ததினிமித்தம் அதன் கோழிக்குஞ்சுகள் அஞ்சி படபடத்ததில், பாம்பு சீறி அக்குஞ்சுகளின் மீதும் விஷத்தை உமிழ்ந்தது. பாம்பைக் கண்டு ரேகா பயந்தபோதிலும், இயேசுவின் நாமத்தைச் சொல்லி அப்பாம்பை விரட்டியடித்து, அக்குஞ்சுகளைக் காப்பாற்றினார். பாம்பின் விஷத்தினால் குஞ்சுகளுக்குப் பாதிப்பேதுமில்லை. அது மட்டுமல்ல, அவருடைய பெலவீனத்திலிருந்தும் ஜெபத்தினால் பூரண சுகம் கிடைத்தது. தேவனுக்கே புகழ்!*

22 நவம்பர்
செவ்வாய்

# தாத்ரா & நகர் ஹவேலி

## சில்வாசா:

**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** புதிதாக 194 பேர் கிறிஸ்துவின்மீது தங்களுக்கிருக்கும் விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். வார்லி மொழி வேதாகம மொழிப்பெயர்ப்பின் சரிபார்த்தல் பணி நிறைவு பெற்றுள்ளது. வயலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது விகேஷ்பாயை பாம்பு கடித்தபோதிலும், அறுவடைப்பணி செய்து கொண்டிருக்கும் போது பாம்பு என அறியாமல் அதை மனிஷா தன் கையால் பிடித்தபோதிலும் இருவரும் எவ்வித ஆபத்துமின்றி காக்கப்பட்டுள்ளனர். பாகுபாய் சிறுநீர் பாதை நோய்த்தொற்றிலிருந்தும், கண் பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்துள்ளார். விசுவாசத்தில் பின்வாங்கிப்போயிருந்த பவுலோஸ் 9 வருடங்களுக்குப்பின் மீண்டும் கிறிஸ்துவண்டை வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்ஷ்மண்பாய் பக்கவாதத்திலிருந்து சுகம் பெறவும், அதன் மூலம் அவரது குடும்ப அகங்கத்தினர்களான 35 பேரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; முனிபேன் தோல் ஒவ்வாமை பிரச்சனையிலிருந்தும், 4 வயதான லலித்பாய் இரத்தவாந்தி பிரச்சனையிலிருந்தும் அற்புத சுகமடைய; தக்கிபேன், மாதுரிபேன் மற்றும் விஜய்பாயின் குடும்பம் மழலை பாக்கியங்களினால் ஆசீர்வதிக்கப்பட; மெகுல்பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

## கட்சாந்தூர்:

**பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்**

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 2 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு சிறப்பாக 5 கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. 2 இடங்களில் பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நடைபெற்றுள்ளன. ஒரு விசுவாசிகள் முகாம், ஒரு ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாம், 39 வீட்டு ஜெபக்கூட்டங்கள் மற்றும் 2 உபவாச ஜெபக்கூடுகைகள் யாவும் ஆசீர்வாதமான முறைகளில் நடந்து முடிந்துள்ளன. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட லிங்குடா கிராமத்தலைவர் மற்றும் மூப்பர்கள் தேவவார்த்தையின்மீது மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். லிங்கி கிராம பூச்சம்மா தீய ஆவியின் கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்த்வி மற்றும் ராகிபள்ளி கிராமங்களில் ஆலயங்கள் கட்ட தகுந்த நிலங்கள் கிடைக்க; லிங்குடா, கிரிகாமா, குச்சிலாபூர் ஆகிய கிராமங்களிலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; மோதிராமின் குடும்பம் மற்றும் சல்பா பிசாசின் கட்டுகளிலிருந்து விடுபட; நாகேஷ்வரன் வலிப்பு நோயிலிருந்தும், ஸ்ரீகாந்த் கால், கை விரல்களிலுள்ள புண்களிலிருந்தும் சுகம் பெற; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர ஜெபிப்போம்.

## 23 நவம்பர்
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாஷ்வா K.S.
திரு. ஜாண்பால் ஹாரிஸ்

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 3 புதிய நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் வந்து இணைந்துள்ளனர். புதிய தொடர்பாளரொருவர் வேதாகமத்தை விருப்பத்துடன் வாங்கிச் சென்றுள்ளார். வாலிபர்கள் மத்தியில் வேதாகம வகுப்புக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. 4 பெண்கள் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 4 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. சிலர் மரித்தும் பலர் காயமடைந்திருந்த போதிலும், ராமசந்த்பாயின் குடும்பத்தினர் எவ்வித காயமுமின்றி அப்பெரிய விபத்தினின்று காக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளைத் திருச்சபையாகக் கூடி ஆராதிக்கவிடாமல் தடைசெய்கின்ற பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அம்பாதுக் கிராமத்தலைவர் மனம் மாற; சரீரம் முழுவதும் ஒருவித சரும எரிச்சலினால் அவதிப்படும் மேதாபாய் சுகம் பெற; கென்னடி இரத்தசோகை பிரச்சனையிலிருந்தும், முன்னாபாய் வாய்ப்புற்றுநோயிலிருந்தும், புரலிபாய் மற்றும் நதுபாய் மனநோயிலிருந்தும் பூரண குணமடைய; வரும்நாட்களில் நடத்தத் தீர்மானித்துள்ள கூடுகைகள் யாவும் எவ்வித தடங்கலுமின்றி ஆசீர்வாதமாய் நடந்தேற ஜெபிப்போம்.

### இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** சுவிசேஷம் 3 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியம் 4 கிராமங்களிலும், புதிய விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகைகள் 2 கிராமங்களிலும், ஊழியப்பின்தொடர்பணிகள் 6 கிராமங்களிலும் நல்ல பயன்தரும் வகையில் நடத்தப்பட்டுள்ளன. ஜெபத்தின் மூலம் பிறவியிலிருந்தே வாய்ப்பேச மற்றும் காதுகேட்க இயலாமலிருந்த சுனில் தேவ் பேசவும், விமலா நுரையீரல் வீக்கத்திலிருந்து சுகம் பெறவும் தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெபத்தின் மூலம் பேச ஆரம்பித்துள்ள சுனில் தேவிற்கு கேட்கும் செவித்திறனும் கிடைக்க; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள சுரேகாவின் கணவர் மனந்திரும்பி, தனது மனைவியுடன் கூடி வாழ; அவினாஷ், ராம்தாஸ், வேலு மற்றும் ஸ்ரீராம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; வயிற்று வீக்கத்திலிருந்து சுனிதா சுகம் பெறவும், அதன் மூலம் அவரது கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் உண்டாகவும்; ஜெபிக்கவிடாமல் அடிக்கடி சண்டையிடும் பழக்கம் கொண்ட தாராவின் மாமியார் லீலா மனம்மாறி, கிறிஸ்துவின் அன்பைக் கண்டுகொள்ள; உயர்ஜாதி மக்கள்மீது கொண்டுள்ள அச்சத்தினால் தங்களது கிராமங்களிலிருந்து பிற கிராமங்களுக்குச் சென்று தேவனை ஆராதிக்கத் தயங்கும் நமது விசுவாசிகளுக்கு தேவன் நல்ல மன தைரியத்தைக் கட்டளையிட; பாபாபேன் ஒவ்வாமை பிரச்சனையிலிருந்தும், பாபு பக்கவாதத்திலிருந்தும், ஜங்கு காது கேளாமையிலிருந்தும், அவரது பேரன் நடக்க இயலாமை பிரச்சனையிலிருந்தும் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

## 24 நவம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா செல்வி ஹென்றி
திருமதி. கிரண் பெங்ரா லவ்லின்

### மந்தனா:
**கொடிசிலா பிரவீன் & மௌனிகா**

**துதிக்க:** புதிதாக 4 பேர் இயேசுகிறிஸ்துவின் மந்தைக்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தித்ரி கிராம நாதர் ஜெபத்தின் மூலம் மருத்துவர்கள்கூட குணமாக்க இயலாது என்று சொன்ன வெள்ளை இரத்த அணுக்களின் குறைவுப்பிரச்சனையிலிருந்து அற்புத சுகம் பெற்றுள்ளார். போதுமான பணமில்லாத சூழ்நிலையிலும் பொறியியல் கல்லூரியில் ராணிக்கு இடம் கிடைக்கவும், கல்லூரி கல்விக் கட்டணத்தைக் கட்டி முடிக்கவும் தேவன் ஈந்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக்கல் கோளாறிலிருந்து புரிபாய் சுகம் பெற; மந்தனா கிராம பாபு தனது புதிய சூப் வியாபாரத்தில் இலாபகரமான வெற்றியடைய; அம்ஜிரி கிராம நாராயண் காவல்துறை வழக்கிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

### பாவ்ரி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:
**ஜேன் அமுத கிருபை இம்மானுவேல்**

**துதிக்க:** பாவ்ரி மொழியில் புதிய ஏற்பாட்டு மொழிப்பெயர்ப்பின் தட்டெழுத்துப்பணியும், சரிபார்த்தல் பணியும் முறையே சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. இம்மொழியில் ஒலிவழி வேதாகமம் பதிவு செய்யும்பணி நிறைவு பெற்றுள்ளது. அதில் பழைய ஏற்பாட்டு மொழிப்பெயர்ப்பிற்கான ஆயத்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபட்டுள்ள உதவியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் இம்மட்டும் தேவன் கொடுத்து வருகிற ஞானம், அறிவு, சுகம் அனைத்திற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிறைவு பெற்றிருக்கும் பாவ்ரி மொழியின் ஒலிவழி வேதாகமம் தேவ நாம மகிமைக்காக அம்மக்களின் கரங்களில் சென்றடைய; அம்மக்கள் மேலும் கிறிஸ்துவை அறிய இம்மொழியின் புதிய ஏற்பாடு விரைவில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட; மொழிப்பெயர்ப்பு உதவியாளர்களான ஈஸ்வர் மற்றும் மச்சிந்தரின் குடும்ப மக்களின் ஆரோக்கியத்திற்காக; முதியோர்கல்வி திட்டத்திற்கான பொருளேடுகள் மற்றும் சிறுவர் வேதாகமப் பள்ளி வகுப்பிற்கான பாடத்திட்டங்களும் பாவ்ரி மொழியில் மொழிப்பெயர்க்கப்பட ஜெபிப்போம்.

---

### *'லம்ப்பி வைரஸ்'*

*மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். கால்நடைப் பிராணிகளிடையே வெகுவாய் பரவும் ஒருவகை தோல் நோய்க்கிருமி 'லம்ப்பி (கட்டி) வைரஸ்' ஆகும். இந்நோயின் தாக்கத்தினால் அதிகளவு பிராணிகள் இறந்துப்போவதும் உண்டு. இந்த நோய் கெந்தலாலின் எருதையும் விட்டுவைக்கவில்லை. அதன் தோல் முழுவதும் கொப்பளங்கள் வந்து, அம்மாடு சாப்பிடுவதை நிறுத்திவிட்டதோடு, வலி தாங்கமுடியாமலும் சத்தமிட்டது. கெந்தலாலும், அவரது மனைவியாலும் அம்மாடு படும் துன்பத்தைப் பார்க்க முடியவில்லை. எனவே, தங்களது மாட்டிற்காக ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன், அம்மாட்டை மாத்திரமல்ல அது மூலம் மற்ற மாடுகளுக்கும் அந்நோய் பரவாதபடி முழுசுகத்தைக் கட்டளையிட்டார். அல்லேலூயா!*

---

**25**
**நவம்பர்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மிரிலா சம்பிரமரி
திருமதி. ரூத் ஸ்டான்லி
திரு. டெப்ரட்டோ பிஸ்வாஸ்
செல்வி. வசாவா அருணாபேன் டாமனியாபாய்

## காண்ட் பாரா & நவாபூர்:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 14 பேர் புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவர்மீதுள்ள தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 11 இரவுநேர ஜெபக்கூட்டங்களும், 3 வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூட்டங்களும், 3 வாலிபர் கூடுகைகளும், 6 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகளும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளன. நமது இயக்க நிர்வாகத்தை விட்டுப்பிரிந்து சென்றிருந்த சன்பாடா திருச்சபை மீண்டும் நம்மோடு இணைந்துள்ளது. 5 குடும்பங்கள் நமது ஆராதனைகளிலும், ஜெபக்கூடுகைகளிலும் தவறாமல் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலபாவ்லா, பச்சிரிபாரி, சிர்வ் மற்றும் நிம்போனி கிராமங்களில் சுவிசேஷத் திற்கான வாசல்கள் திறக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான தாமு, பிரகாஷ், பிரவின், ராஜேஷ் மற்றும் உஜ்வாலா கிறிஸ்துவை மனதார ஏற்றுக்கொள்ள; பிரகாஷினால் தவறான போதனைக்கு ஆளாகும் நவ்லி திருச்சபையினர் ஞானமாய் கிறிஸ்துவின் போதனையில் நிலைத்து நிற்க; ஜம்தா கிராம ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நீர்க்கசிவு சீரமைக்கும் பணிக்கான உபகரணங்கள் கிடைக்கப்பெற்று, அப்பணி விரைவில் முடிவடைய; வசாவா இனமக்களிலிருந்து திரளான ஊழியர்கள் எழும்ப ஜெபிப்போம்.

# கர்நாடகா

## கோலார்:

### சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** தீய ஆவியின் பிடியில் 25 வருடங்களாக சிக்கியிருந்த மஸ்தான் ஹள்ளி கிராம ருக்மணியம்மா தேவ கிருபையால் விடுவிக்கப்பட்டுள்ளார். தன் திருமண வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனையினிமித்தம் விஷமருந்தி, மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்த சத்ரகோடல்லி கிராம ரக்ஷித் ஜெபத்தின் மூலமாக மீண்டும் புதியதொரு வாழ்வைப் பெற்றுள்ளார். இப்பகுதியில் ஒரு கிறிஸ்தவப்பள்ளியை நடத்திவரும் நமது ஊழிய ஆதரவாளர்கள் சந்தித்த நிலப்பிரச்சனையில் தேவன் பாராட்டியுள்ள நல்ல தீர்விற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளை களுக்குத் தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; தங்களது திருமண வாழ்வில் ஏற்பட்ட பிரச்சனைகளினிமித்தம் விசுவாச வாழ்வில் பின்தங்கியுள்ள நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; ஸ்ரீனிவாஸ்பூர் பகுதி ஆலயக்கட்டுமானப்பணி சீக்கிரத்தில் முடிவடைய; 10-ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் கோலார் லிங்காயத் மக்களினத்தைச் சார்ந்த சந்திரா கலக்கம்மாவின் மகன் சாத்பிக் தனது நேரத்தை இணையதள விளை யாட்டுகளில் வீணடிக்காமல் நன்றாக ஆர்வமுடன் படிக்கவும், அவர்களது முழு குடும்பமும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**26 நவம்பர்**

**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மனாசே டேனியல்

## முன்ட்கோட்:

### சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 6 புதிய ஏற்பாடுகளையும், 5 வேதாகமங்களையும் பெற்றுச் சென்றுள்ள மக்கள் அதை கருத்தாய் வாசித்து, பரிசுத்தாவியானவரின் கிரியைக்கு தங்களை ஒப்புக்கொடுக்க தொடங்கியுள்ளனர். ஒரு பெண்கள் கூடுகை நடத்தப்பட்டுள்ளது. அநேக வருட ஜெபத்தின் விளைவாக முன்ட்கோட் பகுதியில் வசித்துவரும் 3 திபெத்தியர்கள் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 40 வயது கலாம்மா குடற்புண் காய்ச்சலிலிருந்தும், பிஷப்பா கால் வீக்கத்திலிருந்தும் சுகமடைந்துள்ளனர். நமது ஞாயிறு ஆராதனையில் புதிதாக 3 குடும்பங்களும், ஒரு ஆசிரியரும் வந்து கலந்துகொள்கின்றனர். தேவேந்திர பல்கிரி கட்டுமானப்பணி செய்து கொண்டிருக்கும்போது மேற்கூரை தவறி அவரது கைமீது விழுந்தபோதிலும், தேவ கிருபையால் அவர் சிறிய காயங்களுடன் பாதுகாக்கப்பட்டார். நமது தன்னார்வ ஊழியரான சந்தோஷ் 10 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தைச் சிறப்பாக செய்து முடித்துள்ளார். பலபீடி கிராமத்தில் அநேக நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நமது ஞாயிறு ஆராதனை மீண்டும் தொடங்கப்பட்டு, அதில் 15 முதல் 17 பேர் கூடி தேவனை ஆராதித்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீர் நோய்த்தொற்று சம்பந்தமான கோளாறிலிருந்து 6 வயது சிறுமி பிரித்வி முழு சுகமடைய; பில்லி சூனியக்கட்டினால் ஏறத்தாழ 50 வருடங்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கும் ஷரிஃப் அற்புத சுகம் பெற; தனது கணவரை இழந்து 2 பிள்ளைகளுடன் தனது வாழ்வாதார தேவைகளுக்காய் வேலை தேடியலையும் ரேஷ்மாவிற்கு தேவ அனுக்கிரகம் கிடைக்க; அடிக்கடி தாங்கொண்ணா வயிற்று வலியினால் துடிக்கும் அக்கம்மாவின்மீது தேவனின் சுகமளிக்கும் கரம் பட; பந்தனா தீய ஆவியின் பிடியிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** மிட்டாபள்ளி நிலத்தகராறு சமாதானத்துடன் முடிவடைந்துள்ளது. 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகை C. பண்டாபள்ளியில் அனைத்து தேவ ஊழியர்கள் மற்றும் அருகாமையிலுள்ள திருச்சபைகளின் மக்களுடைய ஆதரவுடன் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. பொகிட்டிவாரிபள்ளியின் கவுன்சிலரான கருணாகர் ரெட்டி நமது விசுவாசியொருவரின் மனுவை முன்னிட்டு ஆலயம் கட்டுவதற்கான நில அனுமதியை வழங்க வாக்குக்கொடுத்துள்ளார். மாலா சமூகத்தினர் வாழும் கவ்குந்தா கிராமத்தில் சுவிசேஷத்திற்கான திறந்தவாசல் கிடைத்துள்ளது. மரண வியாதிப்படுக்கையில் கிடந்த கோபி அற்புதமாக மீண்டும் புதுவாழ்வு பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் உறுதியற்ற நிலையில் இருக்கும் நமது புதிய தொடர்பாளர்களுக்காக; பொகிட்டிவாரிபள்ளியில் ஆலயம் கட்டுவதற்கான நில அனுமதியை வழங்க வாக்குக்கொடுத்துள்ள கவுன்சிலர் தனது வாக்கை நிறைவேற்றவும், அங்கே விரைவில் ஆலயக்கட்டுமானப்பணி தொடங்கப்படவும்; நமது ஊழியப்பணிகள் இன்னும் விரிவாக்கம் பெற தேவையான அர்ப்பணமுள்ள ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**27**
**நவம்பர்**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிங்டின்கிம் ஹயோகிப் லுன்கிம்

## தாமலச்செருவு:
**ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி;**
**அனில் மஹாலி &**
**டிகுமார்தி பிரசாந்தி**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளிகட்லா ஆலயம் புதுப்பிக்கப் பட்டு, அவ்வாலயத்தின் ஆண்டுவிழா அனைத்து விசுவாசிகளின் ஐக்கிய நாளாக சிறப்புடன் கொண்டாடப் பட்டுள்ளது. பெண்கள் கூடுகை மற்றும் பௌர்ணமி இரவு ஜெபக்கூடுகைகள் யாவும் நன்கு நடைபெற்றுள்ளன. திறந்தவெளி கூடுகையின்போது நாராயணரெட்டிபள்ளி கிராமத்தி லுள்ள ஒரு குடும்பத்தினரின் வீட்டிற்கு வந்த உறவினர்களுக்கும் சுவிசேஷம் பகரப்பட்டுள்ளது. தீய ஆவியின் பிடியிலிருந்து மஞ்சுமணி விடுவிக்கப் பட்டுள்ளார். அரசாங்க ஆசிரியப் பணிக்கான தகுதித்தேர்வில் கலந்து கொண்ட நமது விசுவாசிகள் யாவரும் அதில் வெற்றி பெற்றுள்ளதற்காகவும், குறிப்பாக கிருபா என்பவர் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி கண்டிருப்பதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறாமல் ஆலய ஆராதனையில் வந்து கலந்துகொள்கின்றபோதிலும் கிறிஸ்துவின் நாமத்தை தைரியமாய் அறிக்கையிட தயங்கும் நமது விசுவாசிகளுக்காக; தனது மகன்களைக் குழப்பத்திற்குள்ளாக்கி, தங்களை ஆராதனைக்குச் செல்ல விடாமல் தடுக்க தூண்டி விடுகின்ற கலாவதியின் உறவினர்கள் மனந் திரும்ப; ஆலயத்திற்கு வரவிடாமல் தடுக்கும் தானியேலின் 2 மகன்களின் வாழ்க்கை இயேசுவின் அன்பால் தொடப்பட; மறைமுகமாக நமது ஊழியச்செயல்பாடுகளை எதிர்க்கும்வண்ணம் அங்குள்ள வாலிபர்களிடம் இயேசுவின் மந்தையில் இணைந்தால் அவர்களுக்கு சரியான வாழ்க்கைத்துணையும், அரசாங்க உத்யோகமும் அமையாது எனக் கூறி பயப்படுத்தும் நபர்கள் மனம் மாற; குடும்பத்தையும், மனைவியையோ அல்லது கணவரையோ விட்டு பிரிந்திருப்போர் மீண்டும் தங்களது குடும்பத்துடன் இணைந்து சமாதானமாய் வாழ; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளோர் விடுவிக்கப்பட; சர்க்கரை நோயினிமித்தமாக மருத்துவர்களால் கால் விரல் நீக்க அறுவை சிகிச்சை செய்யுமாறு ஆலோசனை பெறப் பட்டுள்ள ராகேல் லக்ஷ்மி அறுவை சிகிச்சையில்லாமல் அற்புத சுகமடைய; திரிவேணி சிந்து மனநிலை பாதிப்பி லிருந்தும், ஜெயாம்மா மார்பகப் புற்றுநோயிலிருந்தும் சுகம் பெற; நமது விசுவாசிகள் தவறாமல் ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்ளவும், பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்தேசுவை பற்றிக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**28 நவம்பர் திங்கள்**

# தமிழ்நாடு

## திருவள்ளூர்:

### பால் ஆனந்தன் & சாரா ஜோதி

**துதிக்க:** உபவாச ஜெபக்கூடுகை, ஊழியப்பின்தொடர்பணி மற்றும் வீடு சந்திப்பு கூடுகைகள் யாவும் ஆசீர் வாதமாக நடைபெற்று முடிந்துள்ளன. உஷா நாளுக்குநாள் கிறிஸ்துவில் வளர்ந்து வருவதோடு, ஜெபக்கூடுகைக்கு ஓலை கொட்டகை அமைக்கும்படி தனது நிலத்தையும் நன்கொடையாகக் கொடுத்துள்ளார். வறுமையான குடும்பச்சூழ்நிலையின் மத்தியிலும் ரம்யாவிற்கு தனது 12-ம் வகுப்பை வெற்றிகரமாக முடிக்கவும், கல்லூரி கல்விக்கட்டணம் செலுத்தி ஆய்வக தொழில் நுட்ப பட்டப்படிப்பில் இணையவும் தேவன் கிருபை பாராட்டி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விவசாயத்தொழில் செய்து வரும் தட்சணா மூர்த்தியின் நிலத்தில் மிகுந்த அறுவடை கிடைக்க; நமது ஜெபக்கூடுகைகளில் கிரமமாக வந்து பங்குப்பெறுவோர் தங்களது வறுமை நிலையிலிருந்து சுபீட்சம் பெற; நமது காக்கா கண்டிகை விசுவாசிகள் தங்களது பிள்ளைகளை நன்கு கல்வி கற்கச்செய்யவும், அவர்களுடைய வாழ்வாதாரம் மேம்படவும் ஜெபிப்போம்.

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. மேலும் 2 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். 10 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. 5 புதிய விசுவாசிகள் நமது ஆராதனைகளில் கலந்து கொள்கின்றனர். பெண்ணியப் பிரச்சனையிலிருந்து ஹேமா சுகம் பெற்றுள்ளார். இம்மழைக்காலங்களில் தேவன் நமது விசுவாசிகளையும், ஊழியர்களையும் தமது கண்ணின் மணிபோல காத்துவருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நல்ல பயனுள்ள விதத்தில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப் பட; நமது புதிய தொடர்பாளர்கள் பல விதமான பிசாசின் கட்டுகளிலிருந்து மீட்கப்பட; கோட்டையூர், தாண்டியம் மற்றும் தேவன்தொட்டி பகுதி களில் சுவிசேஷம் பரவ; சைமன் முனிராஜின் குடும்பப்பிரச்சனை தீர்ந்து சமாதானமாய் வாழ; குமார் மற்றும் ரூபாரெத்தின் குடும்பங்கள் குழந்தை செல்வங்களினால் ஆசீர்வதிக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந் திருப்போர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்க; தனபால் பக்கவாதத்திலிருந்தும், ஜேக்கப் தோல் ஒவ்வாமை பிரச்சனையிலிருந்தும், கவிதா புற்றுநோயிலிருந்தும், தனம் வயிற்றுக்கட்டியிலிருந்தும் மற்றும் ராஜ் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

## 29 நவம்பர்
### செவ்வாய்

**மேச்சேரி:**

**தர்மராஜ் R. R. & மரிய செல்வி**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் வீடுவீடாகச் சென்று சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 75 பேர் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். ஊழியப்பின்தொடர்பணி மற்றும் ஜெபக்குழுக்கள் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன. முனுசாமி மற்றும் கோட்டை ரெட்டியின் குடும்பத்தினர் இனந்தெரியாத காய்ச்சலிலிருந்து சுகமடைந்துள்ளனர். புதிய கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்யும்போது, நமது ஊழியர்களுக்கு பாதிப்பொன்றும் நேரிடாதபடி தேவன் காத்து வருகின்ற தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாற்கு சுவிசேஷ புத்தகப்பிரதியைப் பெற்றுச்சென்றிருப்போர் அதை கவனமாக வாசிக்கவும், கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும்; மாரியப்பன் மூச்சுத்திணறலிலிருந்தும், உஷா குடற்புண் பிரச்சனையிலிருந்தும் சுகமடைய; கண்ணய்யன் மற்றும் முனிசாமியின் குடும்பத்தினர் கடன் பிரச்சனையிலிருந்து மீள; 2 சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் கீதாவிற்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### *அழகிய மாற்றம்!*

*பீஹார், பகாயா பணித்தளம். மதமாற்றம் என குற்றம் சாட்டப்பட்டு, நமது சுதேச ஊழியர்களை ஒருநாள் இரவு முழுவதும் சிறையில் அடைத்தனர். அவர்களை விடுவிக்க ஜீவன் மார்க் ஓராவன் சமிதி அங்கத்தினர்கள் சிறைச்சாலைக்குச் சென்றனர். அவர்களோடு கர்த்தருக்கென மிகுந்த வைராக்கியமாய் செயல்படும் தன்னார்வ ஊழியரான ரவீந்தர் குஜூரும் சென்றார். அங்கே காவல் நிலையத்தில் இருந்த அனைவரிடத்திலும் அவர் தனது சாட்சியைப் பகர்ந்து கொண்டு, சுவிசேஷ கைப்பிரதிகளையும் பிரசுரித்தார். பின்னும் அவர், 'பீஹார் முதலமைச்சர் செய்ய இயலாததை இயேசுவின் சுவிசேஷம் செய்யும்' எனக் கூறினார். ஏனெனில், பீஹார் முதலமைச்சர் தான் பதவி பொறுப்பில் வந்தவுடன், சாராயம் காய்ச்சுவதையும் குடிப்பதையும் நிறுத்துவதற்கென முயற்சித்தார். அம்முயற்சியில் தோல்வியையே கண்டார். ஆனால், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் யாவரும் சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் தாங்களாகவே விட்டுவிட்டு, சந்தோஷமான வாழ்வு வாழ்கிறார்கள். அதுபோல் இன்னொரு கிராமமான நந்தலால் பூரிலும் 70 பேர் கூடி சுவிசேஷத்தை எதிர்த்தபோதிலும், அங்கேயும் அவர் தைரியமாக அவர்களிடம் இயேசு எவ்வாறு தன்னை குடிப்பழக்க அடிமைத்தனத்திலிருந்து மீட்டார் என்பதைச் சாட்சியாக அறிவித்தார். சுவிசேஷத்தை ஏற்போர் சுவிசேஷம் செய்யும் இத்தகைய அழகிய மாற்றத்தை தைரியமாக எடுத்துரைக்கும் இச்செயலுக்காய் கர்த்தரை ஏகமாய் துதிப்போம். அல்லேலூயா!*

**30**
**நவம்பர்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி புஷ்பம் ஜென்னிஸ்

## செங்கம்: K.S. ஜாஷ்வா

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் 7 இடங்களில் நடைபெற்றுள்ளன. சபை கமிட்டி நிர்வாகக்குழு அங்கத்தினர்கள் கூடுகையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அனைத்து பணித்தளங்கள் மற்றும் அங்கு நடைபெறும் ஊழியங்களைக் குறித்த விபரங்களை துதி மற்றும் ஜெபக்குறிப்புகள் என்ற முறையில் பத்திரிக்கையாக சத்திய தீபம் என்ற பத்திரிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நமது ஆலய சுற்றுச்சுவர் பகுதியில் 2 கழிவறைகளும் 1 குளியலறையும் கட்டித்தருவதாக மேல்பப்பம்பாடி பஞ்சாயத்து உதவியாளர் வாக்குக்கொடுத்துள்ளார். ரஞ்சிதாவின் இளைய தம்பியின்மீது இருசக்கர வாகனம் விழுந்த விபத்தில் காயமேதுமின்றி தேவன் அவரைக் காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 1200 புதிய விசுவாசிகள், 12 ஆலயங்கள், 24 ஆராதனைக்குழுக்கள் என நமது ஊழியர்கள் தீர்மானித்திருக்கும் இலக்கை வருகிற 2030-ம் ஆண்டுக்குள் நமது ஊழியர்கள் நிறைவேற்ற; நமது சுதேச ஊழியர்கள் மேற்கொள்ளவிருக்கும் TAFTEE பயிற்சி வகுப்பு மற்றும் அதற்கான சான்றிதழ் பெறும் நிகழ்ச்சிக்குரிய ஆயத்தங்கள் சிறப்பாக நடைபெற; சமுதாய பயமின்றி ரஞ்சிதாவும் அவரது மாமனாரும் தைரியமாக நமது ஞாயிறு ஆராதனைகளில் வந்து பங்கேற்க; செல்வம் மீதுள்ள ஆட்டோ விபத்து வழக்கு விரைவில் தீர்வுக்கு வர ஜெபிப்போம்.



இளங்கலை இறையியல் பட்டம் முடித்த 70 சுதேச ஊழியர்களுக்கு கடந்த செப்டம்பர் 28-ம் தேதியன்று ஃபோக்டி வளாகத்திலுள்ள தலைமைத்துவ பயிற்சி மையத்தில் வைத்து சிறந்த முறையில் பட்டமளிப்பு ஆராதனை நடைபெற்றது. இந்த பாடத்திட்டத்தைச் சிறப்பாக நடத்திக்கொடுத்த அருட்திரு. டாக்டர். பொன்னுராஜ் ஜேக்கப் & டாக்டர். திருமதி. ஜெயந்தி பொன்னுராஜ் அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.



# மிஷனெரிகளின் பிள்ளைகளுக்கான கரிசனைகள்!

நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஓர் பிரதான சுதேச இயக்கமாக தனது சேவைப்பணியை 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாடெங்கும் தொடர்கின்றது. நமது இயக்கம் அதிகமான மிஷனெரிகளின் பிள்ளைகளைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். நமது மிஷனெரிகளுடைய பிள்ளைகளை 7 வகைகளின் கீழ் வரையறுக்கலாம். அவையாவன:

| | | |
|---|---|---|
| சின்னஞ்சிறு குழந்தைகள் | : | 181 |
| பள்ளி செல்லும் பிள்ளைகள் | : | 297 |
| கல்லூரி செல்லும் பிள்ளைகள் | : | 135 |
| வேலைக்காகக் காத்திருக்கும் பிள்ளைகள் | : | 58 |
| வேலையில் இருக்கும் பிள்ளைகள் | : | 58 |
| திருமணமான பிள்ளைகள் | : | 98 |
| சிறப்பு கவனத்திற்குரிய பிள்ளைகள் (Special Children) | : | 7 |

அதிகாரப்பூர்வமாக 5 பள்ளிகள் நமது இயக்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை விபரமாவது:

| | | |
|---|---|---|
| **சந்தோஷ வித்யாலயா,** டோனாவூர், தமிழ்நாடு | : | 220 |
| **கிரேஸ் அக்காடமி,** உத்தராகண்ட் | : | 23 |
| **பெதஸ்தா,** திமாபூர், நாகலாந்து | : | 11 |
| **நவஜீவன்,** விசாகப்பட்டினம், ஆந்திரப்பிரதேசம் | : | 4 |
| **சனபிடா பப்ளிக் ஸ்கூல்,** கோராபட், ஒடிசா | : | 1 |

## *ஜெபிக்க:*

- மிஷனெரிகளின் பிள்ளைகள் மிஷனெரிப்பணியில் தங்களது பெற்றோர்களுக்கான தேவ அழைப்பு மற்றும் அப்பணியின் தன்மைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு, தங்களது பெற்றோர்களுடனும் உடன் பிறந்தோருடனும் நற்தொடர்பு கொண்டு, குடும்பத்தில் நிலையான அன்பு, சந்தோஷம், நம்பிக்கையுடன் காணப்பட;
- தேவனோடு நல்லுறவு கொண்டு, கிறிஸ்துவை அவர்கள் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள;
- ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர்ந்து, பாவ சோதனைகள் மற்றும் தீய செயல்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட;
- சபை மற்றும் கிறிஸ்தவ சமூகத்தினரிடையே அவர்கள் நல்ஐக்கியத்துடன் காணப்பட;
- தாங்கள் பயிலும் பள்ளி மற்றும் கல்லூரிகளிலும், பணிபுரியும் ஸ்தலங்களிலும், சமுதாய பொதுவிடங்களிலும் அவர்கள் சிறந்த முன்மாதிரிகளாக விளங்கிட;
- தகுந்த வேலை வாய்ப்புகளும், ஏற்ற வாழ்க்கைத்துணைகளும், ஆசீர்வாதமான திருமணவாழ்வும் அவர்களுக்கு அமைய;
- நமது இயக்கம் நல்ல தரமான கல்விநிலை மற்றும் விடுதி வசதிகளுடன் கூடிய கிறிஸ்தவப்பள்ளிகளை அவர்களுக்கென அடையாளம் காண;
- மேற்கல்வியைத் தொடர விரும்பியும் தங்களது பெற்றோரின் இயலாமையால் நல்லதொரு கல்வி வாய்ப்பைத் தொடர முடியாமலிருக்கும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுடைய அத்தகைய கல்வித்தேவைகள் பூர்த்தி செய்யப்படவும், அதற்கான நிதியுதவிகள் திட்டமிட்டு உருவாக்கப்படவும்;
- நமது இயக்கம் அனைத்து திருச்சபைகள், மிஷனெரி ஸ்தாபனங்கள், வசதிப்படைத்த கிறிஸ்தவர்கள் & வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) மற்றும் மிஷனெரி தரிசனப் பள்ளிகளுடன் நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, மிஷனெரிகளுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கான நல்ல யுக்திகளைக் கண்டுப்பிடிக்க ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69







***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***